# சிரித்திரன்




பங்குனி 1970
நகை: 6
சுவை: 5
விலை: சதம் 45

A NAME TO REMEMBER IN
BUILDING INDUSTRY TODAY

**M/S. U. N. GUNASEKERA**
**CHARTERED ENGINEERS**

19, Deal Place 'A' Colpetty, Colombo-3.



கட்டிடத் தொழிலைப் பொறுத்தவரை
இன்று நினைவில் நிறுத்தவேண்டிய பெயர்

மெசர்ஸ். யு. என். குணசேகரா
சார்ட்டேட் என்ஜினியேர்ஸ்

19, டீல் பிளேஸ் 'ஏ', கொள்ளுப்பிட்டி, கொழும்பு-3.

PHONE: 29667-22440

தொலைபேசி: 29667-22440

## நிலைக்கண்ணாடி


சரித்திரத்தைச் சரியாகப் பார்த்தால் அது தலைவர்களது சுய சரிதம் என்பது விளங்கும். தலைவர்களது தலையெழுத்தில் தான் ஒரு தேசத்தின் தலைவிதி தங்கியிருக்கிறது. ஒரு நாட்டின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும், ஓர் இனத்தின் உயர்வுக்கும் தாழ்வுக்கும் தலைவர்களே காரணகர்த்தாக்கள்.

தலைவன் என்பவன் மக்களுக்குத் தலையானவன். மக்களை வழி நடத்திச் செல்பவன் அவன். மக்களை ஐக்கியப்படுத்தி, அந்த ஐக்கியத்தின் சின்னமாய் விளங்குபவன். ஒரு தலைவனுக்குத் தர்சனம் வேண்டும். காலத்தின் போக்கைக் கணித்து எதிர்காலத்தை உணரும் ஞானம் வேண்டும். மக்களின் வழிகாட்டி என்பதால், தான் போகும் வழியை அவன் புரிந்திருக்கவேண்டும். பலருக்குப் பிரதிநிதியாவதால் அவன் தன்னையிழந்துவிடுகிறான். மக்களின் மூச்சு அவன் மூச்சாவதால் அவனது தனித்துவச் சுயநலங்கள் தகர்ந்துவிடுகின்றன. அவன் ஓர் இனத்தின் இதயத்தை, ஒரு தேசத்தின் ஆன்மாவை பிரதிபலிப்பவன். எனவே அவன் சரித்திர புருஷன். சமுதாயத்தின் சிற்பி.

தன்னலவாதிகள் தலைவர்கள் அல்லர். தர்சனம் இல்லாதவர்கள், சமூக உணர்வு அற்றவர்கள் தலைவர்கள் அல்லர், நேர்மையும் உள்ளத்தில் தூய்மையும், தியாகமும் மனதில் திடமும் இல்லாதவர்கள் தலைவர்கள் அல்லர். இந்தத் தகைமை இல்லாத் தலைவர்களாற்தான் சமுதாயங்கள் சீரழிந்தன. ஓர் இனத்தின் இழிவுக்கும் அழிவுக்கும் இவர்கள்தான் காரணம்.

இந்நாட்டில் தமிழ் சமூகம் தலைகுனிந்து வாழ்கிறது. தன்மானமிழந்து, தகுதியிழந்து, விரக்தியின் விளிம்பில் வெருண்டு நிற்கிறது. பெருமைமிகுந்த பழமை; வீரம் நிறைந்த வரலாறு; கடல் போன்ற கலாச்சாரம் - அன்று இவையெல்லாம் தமிழனின் சொத்து. இன்று சுரணையிழந்து, சோர்விழந்து, சுருண்டுபோய்க் கிடக்கிறது எமது சமூகம்.

தமிழனுக்கு இன்று வேண்டியது ஒரு தன்னலமில்லாத் தலைவன். அந்தத் தலைவனைத் தமிழனே இனம்காணவேண்டும். எமது இனத்தின் சுபீட்சத்திற்கு இதுதான் ஒரே வழி. + + +



# செய்திச் சோடி

ஆஹா! எங்கள் நாட்டில் எல்லா இன மக்களும் எவ்வளவு ஒற்றுமையுடனும் தேசாபிமானத்துடனும் வாழ்கின்றார்கள் பாருங்கள்!

—பிரதமர்

வட பகுதி எம். பி. க்கள் செனட்டர்கள் அனைவரும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சுதந்திரதினக் கொண்டாட்டத்தை ஒருமுகமாகப் பகிஷ்கரித்தனர்.

—செய்தி

ஃ

பிரதமராக இருப்பேனானால் வேண்டிய இடத்திற்கு ஹெலிகாப்டர் விமானத்தில் பிரயாணம் செய்திருக்கலாம். நானோ இப்பொழுது மிகக் கஷ்டப்பட்டுக் காரில் தான் பிரயாணம் செய்யவேண்டியிருக்கின்றது.

—சிறிமா

நான் எனது வேலைகளைப் பார்த்துக்கொண்டு சுகமாக இருந்திருக்கலாம். மக்களுக்குத் தகுந்த தலைவன் இல்லையென்றுதான் இக் கஷ்டமான அரசியலில் இறங்கினேன்.

—சிறிமா

ஃ

அடுத்த பொதுத் தேர்தலில் கலிகமுவ தொகுதியில் வெற்றி பெற்று சிறிமாவோ அரசாங்கத்தில் நான் ஓர் உதவி மந்திரியாவேன் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

—கேகாலை சேர்மன் பாலசூரியா

மீண்டும் நானே உள்ளூராட்சி மந்திரியாக நியமிக்கப்பட்டு அடுத்த ஆண்டு இப் பாலத்தை வந்து திறப்பதற்காக வருகின்ற பொதுத் தேர்தலிலும் நாங்களே வெல்வதற்கு உதவிசெய்யுங்கள்.

—சுதந்திரக்கட்சி அங்கத்தினர் இபர்ட் காரியவாசத்திடம் மந்திரி பிரேமதாசா வேண்டுகோள்.

ஃ

பயாகம அநாதைகள் நிலையத்திலுள்ள ஒரு பெண்ணுக்கு பிரதமர் டட்லி சேனநாயகா ரூபா 1000/- சீதனம் கொடுக்கவிருக்கிறார்.

—செய்தி

நேபாள மன்னர் மகேந்திராவின் மகன் இளவரசர் பீரேந்திராவின் திருமணத்திற்கு மகா தேசாதிபதி வில்லியம் கோபல்லாவ செல்லவிருக்கின்றார்.

—செய்தி

ஃ

கண்டி - யாழ்ப்பாணம் பாதையில் எதிரெதிரே வந்த இரு இ. போ. ச. கடுகதி பஸ்கள் மோதிக்கொண்டதால் 150 பிரயாணிகள் படுகாயமுற்றனர்.

—செய்தி

கம்பஹாவில் நடைபெற்ற 'நற்சாரதிப் போட்டி'யில் இ. போ. ச. பயிற்சியாளர் டி. எம் தலநாயகா முதல் பரிசைப் பெற்றார்.

—செய்தி

ஃ

இலங்கையிலுள்ள 14,000 வேலையற்ற பட்டதாரிகளை தோட்டங்களில் புளியம்பழம் எடுக்க உபயோகப்படுத்துமாறு ஒரு கமிட்டி சிபாரிசு செய்துள்ளதாம். அப்பட்டதாரிகளின் ஏழைப் பெற்றோருக்காக நான் பரிதாபப்படுகின்றேன்.

—சிறிமா

எனது பிள்ளைகளின் நன்மையைக் கருதியே நான் அவர்களை வெளிநாட்டிற்கு அனுப்பியுள்ளேன்.

—சிறிமா

ஃ

திரு. அமிர்தலிங்கம் எம். பி. அவர்கள் திரு. ஜி ஜி பொன்னம்பலம் எம். பி. அவர்களை மிகக் காரசாரமாகத் தாக்கிப் பேசினார்.

—செய்தி

தமிழர்கள் மற்றைய தமிழர்களை அன்புடன் நேசிக்கவேண்டும். தூய அன்பினால்தான் எதிரிகளையும் வெல்ல முடியும்.


—வி. என். நவரத்தினம் எம். பி.



இந்தமுறை இந்த எம். பி. வரட்டும் வோட்டுக் கேட்க...



உவர் வேலிவழக்குப் பேச உதவினரோ?



அல்லது என் மகளுக்கு ஒரு சம்மந்தம் செய்துவைத்தாரோ?



இல்லை... நான் நாரிநோவோடு கிடக்கும்போது எட்டித்தான் பார்த்தாரா?... உவருக்கு என்ன வோட்டு...




**ட்ராக்டர்**

யாழ்ப்பாணத்தில் அரசியல் ஊர் வலத்தில் பாவிக்கப்படும் வாகனம்.

ஃ

**மணிக்கூட்டுக் கோபுரம்**

நேரத்தின் சமாதி.

ஃ

**ரான்சிஸ்டர்**

கான கமண்டலம்.

ஃ

**பாம்பு**

இயமனின் பாசக் கயிறு.

**வியர்வை**

பணித் துளி

ஃ

**சந்தை**

பொய்ப் பண்ணே.

ஃ

**பழைய 'பேப்பர்'**

தேனீர்க் கடைக் கைக்குட்டை.

ஃ

**கவர்ச்சி நடிகை**

படத் தயாரிப்பாளர்களின் தூண்டில் புழு.

## மிஸிஸ். டாமோடிரன்



Mr. டா: என்னை யாழ்பானத்துக்கு தேர்தல் கூட்டத்திலே பேச அலேச்சிருக்கிறுங்க...

Mrs. டா: வெறி குட்... எங்கே ஒரு ஸ்பீச் அடிச்சுக் காட்டுங்க.

Mr. டா: வக்காளப் பெருமாக்களே எங்க கட்சி வேப்பாலருக்கு உங்க துண்டைப் போட்டு எங்க கட்சியை துண்டு போடுங்கள்.

Mrs. டா: வண்டர்புல், மார்வலஸ், எக்சலண்ட்.

Mr. டா: தாங் யூ டார்லிங்...

## 'சித்திரமும் சிறுகதையும்' போட்டி முடிவு

பரிசுபெற்றவர்: சரோஜினிதேவி, இல 1, 12வது ஒழுங்கை, கொழும்பு-3,

இவருக்கு எங்கள் பாராட்டுக்கள். (கதை 9-ம் பக்கத்தில்)



'ஸ்டார் இனிப்பு' நிறுவனத் தின் உரிமையாளர் செல்வம் காகு, அன்பையும் ஆர்வத்தையும் மூலதனமாகக் கொண்டு உழைப் பின் உயர்வுக்கு உதாரணமாகத் திகழ்பவர், தனது ஸ்டார் இனிப்புகள் மூலம் பல்லாயிரக் கணக்கான பாப்பாக்கள் முதல், பல்லற்ற 'பாட்டாக்கள்' வரை இனிமையைச் சுவைக்க வைத்த வர். யாவருக்கும் இனிமையாக நடந்து, தன் அன்புப் பிணைப் பால், முன்னூறுக்கு மேற்பட்ட உள்ளங்களை அடிமை கொண்டு, அவர்களால் 'பொஸ்' என்று அழைக்கப் படுபவர். இன, மத வேறுபாடின்றி உதவியும், ஊக்க மும் அளித்து உழைப்பை வளர்ப் பவர். மத, தர்ம ஸ்தாபனங்க ளுக்கு இடதுகை அறியாது வழங் குபவர். அனுபவப்பள்ளியில் பல பட்டங்கட்குத் தகுதியுள்ள திரு. செல்வம் காகு அவர்களுக்குக் கிடைத்த ஜே பீ. (சமாதான நீத வான்) பட்டம் சேரிடமறிந்து சேர்ந்த கௌரவமாகும். ||

சிறந்த புகைப்படப்பிடிப்பாளர்கள்
10, அப்துல் ஜபார் மாவத்தை, கொழும்பு-12
தொலைபேசி: 35237

போட்டோ ரெக்ஸ்

[அட்டைப் படம்]

பேட்ரண்ட் ரசல்

## மக்கள் ஞானிக்கு அஞ்சலி


தனிமனிதனாகத் தனித்து நின்று புரட்சிசெய்பவர் மிகச் சிலர். அதிலும் முழு உலகத்திற்கும் எதிராக வரிந்துகட்டி தனி மனித யுத்தம்செய்யும் அசுர பலம் யாருக்குத்தான் இருக்கப் போகிறது. ஆனால் இந்த விஞ்ஞான யுகத்தில் இப்படியான ஒரு புரட்சிவாதி இருக்கத்தான் செய்திருக்கிறார். அவர்தான் அண்மையில் காலமாகிய தத்துவ அறிஞர் ரஸ்ஸல் பிரபு. அநீதியை எதிர்த்து, அராஜகத்தை எதிர்த்து, மனுநீதிக்காக மனித சமூக சுபீட்சத்திற்காக ஓயாது புரட்சிசெய்த உத்தமர் வரிசையில் இவருக்குத்தான் முதலிடமுண்டு.

புரியாத, புதிரான தத்துவ விசாரத்தில் அவர் தன்னை மறக்கவில்லை. புரிய எழுதினார். புரட்சிகரமாக எழுதினார். பாமர மக்களிடையே பகுத்தறிவைப் புகுத்தினார்.

பேனா முனையுடன் அவர் புரட்சி நிற்கவில்லை. செயலில் இறங்கி பல சாதனைகள் நாட்டினார். இயக்கங்கள் தொடங்கி, கிளர்ச்சிகள் தூண்டி, உலகத்தின் இதயத்தை உலுப்பிய வீரர் அவர்.

இனம், தேசம், என்ற குறுகிய வரம்புகளை மீறி, பிரபஞ்ச பிரக்ஞையுடன் மனித குலம் விழித்தெழவேண்டும், அறியாமை அகலவேண்டும், அநீதி அழியவேண்டும், என்பதையே இலட்சியப் பணியாகக்கொண்டு வாழ்ந்தவர். தள்ளாத வயதிலும் அவரது போராட்டம் தளர்ச்சியடையவில்லை. சிறைகளில் தள்ளியும் அவர் சித்தை தளரவில்லை. இறுதி மூச்சுவரை அவர் இலட்சியததில் சளைக்கவில்லை.

இந்த மக்கள் ஞானிக்கு, இந்த பகுத்தறிவு மேதைக்கு, புரட்சியே மூச்சாகக்கொண்ட இந்த புனித மனிதருக்கு சிரித்திரன் சிரம்தாழ்த்தி அஞ்சலி செலுத்துகிறான்.




இ. கணேசமூர்த்தி, வவுனியா.

*சோஷலிஸம் இலங்கையில் மலர இலங்கைப் பத்திரிகைகள் என்ன செய்யவேண்டும்?*

பணம் வாரும் வாரி வள்ளல்களைப் பத்திரிகையுலகத்திலிருந்து வாரிவிடவேண்டும்.

ஃ

ச. ஏசையா, கொழும்பு-18.

*ஒருவனை நல்லவனென்று அறிந்துகொள்வது எங்ஙனம்?*

அவன் ஆதரிக்கும் வேட்பாளர் யாரென்று கூறும், அவன் குணத்தைக் கூறுகிறேன்.

ஃ

சு. பத்மினி, கல்கிசை.

*உண்மையைக் கூறும் மகுடியாரே? உமக்கு லங்கா சாரி பிடிக்குமா, காஞ்சிபுரம் பிடிக்குமா?*

இடதுசாரி பிடிக்கும்.

ஃ

நா. கருணாகரன், கிளிநொச்சி.

*நவீன உலகின் ஆச்சரியங்களில் புதினப் பத்திரிகையும் ஒன்று என்று கருதுகிறேன். உம் கருத்து?*

பழைய செய்தியைத் தரும் பத்திரிகைக்குப் புதினப் பத்திரிகை என்ற பெயர் ஆச்சரியந்தான்!

ஃ

எம். எம். அபூபக்கர், மன்னார்.

*சிரிக்கும் மங்கைக்கும், சீறிப் பாயும் வேங்கைக்கும் வித்தியாசம் என்ன?*

முன்னது முத்துப் பல்லால் கொல்லும். பின்னது குத்துப் பல்லால் கொல்லும்.

ஃ

எஸ். கதிர்காமநாதன், திருமலை.

*நடிகை ஜெயலலிதாவின் வயதென்ன?*

நிலையில்லா வயதைப் பற்றி ஏன் ஐயா கவலைப் படுகிறீர்.

ஃ

எஸ். எஸ். சிவம், கல்கிசை.

*ஒழுகும் வீட்டை வாடகைக்குக் கொடுப்பவரைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம்?*

மாரி வள்ளல்.

எஸ். அன்டனி, அக்கரைப்பற்று.

★ *பல இனங்கள் வசிக்கும் நாட்டை ஆளும் கட்சியின் கொள்கை எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும்?*

வஞ்சசிலமாக இல்லாது பஞ்சசிலமாக இருக்கவேண்டும்.

ஃ

சிரோன்மணி தம்பிராசா, சாவகச்சேரி.

*ஆண் குழந்தை பெற்றவளா அல்லது பெண் குழந்தை பெற்றவளா பாக்கியசாலி?*

பெண் குழந்தை பெற்றவள் பாக்கியசாலி. தாய்க்கு, காரிக்கன் சேலைகூடக் கிடைப்பதரிது; மாமிக்கு காஞ்சிபுரம் சாரி கிடைக்குமல்லவா?

ஃ

சி. சிவனேஸ்வரி, அச்சுவேலி.

*'முதலைக் கண்ணீர்' என்றால் என்ன மகுடியண்ணா?*


காருக்குள் இருந்து கொண்டு மழையில் நனைபவர்களைப் பார்த்துக் கண்ணீர் விடுதல்.

ஃ

எஸ். நவரட்ணம், கொழும்பு.


*சுகவாழ்வை விரும்புபவன் முன்னேற முடியுமா?*

'மலரைப் பிடித்து மரம் ஏற முடியுமா?' என்று கேட்கிறார் ஒரு தத்துவஞானி.



க. அற்புதராணி, மானிப்பாய்.

*எம்மைச் சிரிக்கவைக்கும் மகுடியண்ணுவே, நீங்கள் கவலைப்படுவதுண்டா?*



ஒற்றுமையற்ற சிறுபான்மை இனத்துள் ஈனப்பிறவி எடுத்ததையிட்டுக் கவலைப்படுவதுண்டு அன்புத் தங்கையே!

க. முருகமூர்த்தி, காவலூர்.

*நடிகர் பாலையா என் திருமணத்திற்குத் தவில் வாசிக்க வருவாரா?*

ஏன்... ஜில், ஜில் மனோ ரமாவை நாதஸ்வரம் வாசிக்கக் கூப்பிடலாமே!

ஃ

ம. திசவீரசிங்கம், கரணவாய்

*தில்லானு மோகனம்பாள் போன்ற படங்களால் தமிழனுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுமா?*

தமிழன் உணர்ச்சியே கப்பலேறிவிட்டதே. இல்லாத உணர்ச்சிக்கு எப்படி விழிப்பேற்படுத்தமுடியும்?

ஃ

ந. குணசிங்கம், பருத்தியடைப்பு.

*நாட்டுப்பற்று அற்றவனைத் தேர்ந்தெடுத்து மிருகக்காட்சி சாலையில் வைத்தாலென்ன?*

அப்போது எம்மை யாரையா ஆட்சிசெய்வது!

ஃ

ம. குருசாமி, காரைநகர்.

*அரசியல் வாதிகளால் எமக்கு விடிவு வருமா?*

அரசியல் கோழிகள் கூவி பொழுது விடிவதில்லை சாமியாரே. மக்களுக்கு ஞானோதயம் உண்டாகவேண்டும்.

ஃ

ரா. நாகசுந்தரம், கொழும்பு.

*கலையால் குடும்பத்தை வாழவைக்க முடியுமா?*

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் தாயார் நாகர் கோயிலில் ஒழுகும் சேரி வீடொன்றில் மரணமடைந்த செய்தியை பேப்பரில் படிக்கவில்லையா?

என். நாகநாதன், கொம்பனித் தெரு.

*மகுடியாரே உமக்கு யாரைப் பிடிக்காது?*

இயற்கையான கலை வல்லமை இருந்தும் அதை விருத்தி செய்யாதவர்களைப் பிடிக்காது.

ஃ

எம். ஏ. ரவூப், வெலிகம.

*தீட்டிய மரத்தில் பதம் பார்ப்பதென்றால் என்ன?*

இரவல் வாங்கிய பேனையால் இரவல் கொடுத்தவர் மகளுக்கு காதல் கடிதம் தீட்டுவது.

ஃ

திருமதி. தியாகராசா, பளை

*பைத்திய ஆஸ்பத்திரியில் சன நெருக்கடியாம்... காரணம்?*

தமிழ் படப்பாட்டுகளைக் கேட்டுத் தட்டிப்போட்டது போலும்.

ஃ


எஸ். ஏ. இப்ராஹீம், கொழும்பு.

*ஊருக்கு உபதேசம் செய்யும் மகுடியாரே நீர் மஹாத்மா காந்திபோல் வாழ்ந்தால் என்ன?*

மூன்றும் வகுப்பில் ஏறச் செல்லும் காந்தியை கை கொடுத்து ஏற்றுவார்கள், என்னைக் காலை இழுத்து விழுத்துவார்கள். எப்படி ஐயா காந்திபோல் வாழமுடியும்.

இ. நம்பி, சரவணை.

***பல்கலைக் கழகம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பட்டால்...?***



உயரப் படித்து, உயரப் பறந்து, அயல்நாட்டு உயர்வுக் குப் பாடுபடுவார்கள்.

எமது விற்பனையாளர்

இரத்தின மாளிகை,
88, பிரதான வீதி,
ஹட்டன்.

**சொல்லோவியன், நெடுங்கேணி.**

***பணமில்லாதவன் பணக்காரனைப் பார்த்துப் பொறாமைப் படுவதேன்?***

எரிக்கும் வெய்யிலில் வாடுபவன் 'ஏர்கண்டிஷன்' அறையில் இருப்பவனைக் கண்டு பொறாமைப் படாமல் என்ன செய்யமுடியும் தம்பி.

ஃ

**எம். வேதநாயகம், கொழும்பு-15**

***காசைக் களவெடுத்து, மறியலில் அடைபட்டிருப்பவனுக்கும்! காசைக் கொடுத்துக் கலரியில் அடைபட்டிருப்பவனுக்கும் வித்தியாசம் என்ன மகுடியாரே?***

முன்னவனுக்குத் தலையெழுத்து. பின்னவனுக்குக் கலை எழுத்து.

ஃ

**க. நவரத்தினம், நெடுங்கேணி.**

***புலமையிருந்தால் வறுமை இருக்கும்' - இந்நாளில் இது பொருந்துமா?***

இலந்தப் பழ புலமைக்கு வறுமையில்லை. இலக்கியப் புலமைக்கு வறுமையுண்டு.

***அரசியல்வாதி, துறவியல்வாதி - இவர்கள் அடிக்கடி நினைப்பது எதை?***

அரசியல்வாதி அடுத்த தேர்தலை. துறவியல்வாதி அடுத்த உலகத்தை.

**சி. உதயணன், ஹட்டன்.**

***ஸ்ரீமான் எம்.பி அவர்கள் மதிப்பது யாரை மிதிப்பது யாரை?***

வாக்குச் சீட்டு இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர்.

ஃ

**க. சுந்தரலிங்கம், பேசாலை.**


***அபசுரம் என்றால் என்ன?***

நேரம் காட்டா மணிக்கூட்டின் மணியோசையும், வழிகாட்டா அரசியல்வாதியின் கூச்சலும்.

ஃ

★ இந்த அடையாளமிட்ட கேள்வி ரூபா 5/-ஐ பெறுகிறது.

***மனிதனுக்கு வால் முளைத்தால்...?***



முனிசிபாலிட்டி தயாரிக்கும் கொசுப் படையை விரட்ட வசதியாக இருக்கும்.

# காதலிப்பூ!

சரோஜினிதேவி

'சரோ...! ஏய் சரோஜினி...! ஏன்டி இவளே...!'

என் சிநேகிதி அனுஷாவின் குரலை எனக்குத் தெரியாதா. இருப்பினும் தெரியாதது மாதிரித் திரும்பிப் பார்த்தேன்.

'யாரது?...ஓ...அனுஷாவா?'

'அப்பாடி! அதாவது தெரியுதே. லெக்ஷர் முடியவேண்டியது, புத்தகக் கட்டையும் தூக்கிண்டு குனிந்த தலை நிமிராமல் நேரே அறையிலே போய் முடங்கிடவேண்டியது. ஏன்டி ரிஷி பத்தினி, நீங்களெல்லாம் எதுக்காகத்தான்டி வாசிற்றிக்கு வர்றீங்க?'

'நாங்களெல்லாம் படிக்கத்தான் வாசிற்றிக்கு வர்றோம். ஆமா, இப்படி மூச்சு வாங்க ஓடி வந்தியே, அப்படியென்ன தலை போற விஷயம்?'

'ஒண்ணுமில்லேயடி, ரொம்பச் சின்ன விஷயம்தான்.'

'என்ன நோட்ஸ் ஏதும் வேணுமா?'

'ஐயையோ, அப்படியொண்ணும் முக்கியமான விஷயமில்லை. வந்து... நான்...'

'சொல்லித் தொலையேன்டி'

'நான்... நான் காதலிக்கப் போறேன்!'

'என்னடி உளர்றே?'

'சத்தியமாகத்தான்டி சொல்றேன். நான் காதலிக்கப் போறேன்!'

'யாரை?'

'தெரியாது!'


'எனக்கு விளையாட நேரமில்லே. நான் வர்ரேன்.' தொடர்ந்து நடையைக் கட்டினேன் நான்.

விஞ்ஞானப் பட்டப் படிப்புக்காக என்றைக்கு இந்தப் பேராதனை சர்வகலாசாலையில் காலடியெடுத்து வைத்தேனோ அன்றைக்கே ஆரம்பித்தது இந்தச் சிநேகம். ஆனால் ஒன்றுமட்டும் உண்மை. இந்த அனுஷா எப்பவும் இப்படித்தான், ஏதாவதொரு வம்பு பேசிக்கிட்டேயி



'சித்திரமும் சிறுகதையும்' போட்டியில் முதற் பரிசு பெற்ற கதை.

விசித்திரக் கற்பனை



ருப்பாள். ஆனாலும் ரொம்ப நல்லவள் இந்த அனுஷா.

'சரோ!... ஏய் சரோ! என்னடி நீ, நான் பாட்டுக்குக் கூப்பிட்டுக்கிட்டே வர்ரேன். நீ பெரிய இவ மாதிரிப் போய்க்கிட்டே இருக்கியே. கொஞ்சம் நில்லேன்டி.' விரைந்து சென்ற என்னை முன்வந்து தடுத்து நிறுத்தினாள் அனுஷா.

'ம்... நீ என்னை விடமாட்டே. சரி, விளையாட்டை விட்டிட்டு நேரா விஷயத்துக்கு வா கேட்கறேன்.' பாதையோரம் நின்றபடி கண்டிப்புடன் கூறினேன் நான்.

'சரோ, நீ என்னைத் தவறாக நினைக்காதேடி. சத்தியமாகச் சொல்றேன்டி, நான் காதலிக்கப் போறேன்.'

'ஆமா காதலிக்கப்போறே, ஆனால் யாரையென்று தெரியாது. அப்படித்தானே?'

'யாரையென்றுதான் இன்னும் நான் தீர்மானிக்கவேயில்லையே. அதுக்குத்தான்டி உன் உதவி தேவை.'

'எப்படியோ, யாரையாவது காதலிச்சாகணுமென்கிற முடிவுக்கு வந்திட்டே, இல்லையா!'

'ஆமான்டி சரோ.'

'அது சரி, இப்ப விலைவாசியெல்லாம் எப்படி ஏறியிருக்குத் தெரியுமா?'

'அதைப்பற்றி எனக்கென்னடி கவலை. காதல் மார்க்கெட் ரேட்தான் இப்போ ரொம்பக் கொறைஞ்சிருக்கே.'

'அதுவும் சர்வகலாசாலையிலே ரொம்ப ரொம்பச் சீப்! இல்லையா?'

'ஹி.. ஹி! ஆமான்டி.'

'ஓஹோ, நீயே ஏத்துக்கறயா. சரி அனு, நீ என்ன காரணத்துக்காகத்தான் காதலிக்கப் போறே, அதையாவது சொல்ல முடியுமா?'

'காரணமொண்ணுமில்லேடி. எல்லாம் சும்மாதான்.'

'சும்மாதான் என்றால்...!'

'என்னடி நீ, வாசிற்றிக்கு வந்ததும் காதலிக்காட்டா எப்படி. சுற்றிவரப்பாரு, எத்தனை பேர் ஜோடி ஜோடியாத் திரியுறாங்க தெரியுதா?'

'அப்போ வாசிற்றிக்கு வந்து விஞ்ஞானப் பட்டம் வாங்கறதுக்குமுன்னே காதல் பட்டம் வாங்கிடணுமென்கறதுதான் உனக்கு முக்கியமாப் போச்சு, இல்லையா?'

'போடி, நீ ஒரு இது!'

'ஏன்டி அனு, படிக்க வந்த இடத்திலே காதலிலே ஆரம்பித்தால் உன் படிப்பு என்னாகிறது?'

படிப்புக்கும் இதுக்கும் என்னடி சம்பந்தம். இது சும்மா நேரப் போக்குக்குத்தானே. இதோ பாரு தனியா இருக்கறது எவ்வளவு போரடிக்குது தெரியுமா. அதனாலேதான்...

'யாரையாவது காதலிச்சு ஜோடியா ஊர்சுற்றி, நேரத்தையும் வாழ்க்கையையும் ஒருசேரப் பாழடிக்கலாமின்னு பார்க்கறே, இல்லையா?'

'போடி'

'சரி வாடி.'

இருவரும் நடந்து சென்றோம். நான் பேச்சைத் தொடர்ந்தேன்.

'ஆமா, நீ காதலிக்கற முடிவுக்குத்தான் வந்திட்டியே, என் கிட்டே என்ன உதவியை எதிர் பார்க்கிறே?'

'காதலிக்கறது என்னைப் பொறுத்ததுதான். ஆனால் செலெக்ஷன் உன்னைப் பொறுத்தது.'

'என்ன செலெக்ஷன், உன் கல்யாணப் புடவை செலெக்ஷனா?'

'இல்லையடி, என் காதலர் செலெக்ஷன்.'

'பூ! இதென்னடி பிரம்மாதம். சும்மா நேரப் போக்குக்குப் பண்ணற காதல்தானே. இதுக்கென்ன பெரிய செலெக்ஷன் வேண்டியிருக்கு.' மிக அலட்சியமாகக் கூறினேன்,

> ஒருவன்: இன்றைய கூட்டத்திற்கு கல் எறிய மறந்துவிட்டாயே!
> மற்றவன்: நான் மறக்கவில்லை. கல்லைத் தேடிக்கொண்டிருக்கும் போதே கூட்டம் முடிந்துவிட்டது.
>
> —சித்தன்கேணியூர் அ. பற்குண

'அது நியாயந்தான். இருந்தாலும் தந்செயலா அவரையே கல்யாணம் பண்ணவேண்டி வந்திட்டா...?'

'அப்படியா சங்கதி?'

'ஆமாடி. அதனாலேதான் இப்பவே நல்ல ஆளா செலெக்ட் பண்ணிட்டா ஒருவேளை பின்னாலே உபயோகப்படுத்திக்கலாமேன்னு பார்க்கறேன்.'

'அதாவது, விளையாட்டுக்குப் பிடிக்கறதாயிருந்தாலும் புளியங் கொம்பையே பிடிச்சிடணுமென்கறே. நல்ல ஐடியாதான்.' என்று ஆமோதித்துவிட்டு மேலும் தொடர்ந்தேன். 'ஆமா இங்கே படிக்கற யாரையாவது நீ மனசிலே நெனச்சிருக்கியா?'

'போடி பைத்தியம், உனக்கு உலகமே தெரியல்லே. வேலையில்லாத் திண்டாட்டம் இப்போ என்ன நிலையிலே இருக்கு. இப்போ படிக்கறவரைக் காதலிச்சா அவர் படிச்சு பாஸ் பண்ணி வேலைதேடி முடியறதுக்குள்ளே நான் கிழவியாயிடுவனே!'

அப்படின்னு யாராவது ஒரு லெக்ஷரராப் பார்த்துக்காதலி.'

'எக்ஸாக்ட்லி. அதுதான்டி நம்ம ஐடியாவும். இப்போ சொல்லு யாரைக் காதலிக்கலாம். சீக்கிரம் சொல்லடி.' என் கையைப் பிடித்து உலுக்கினாள் அனுஷா.

'அம்மா தாயே, காதலுக்கு இவ்வளவு ஸ்பீட் கூடாதம்மா. அக்ஸிடென்டாயிடும்!'

'சும்மாயிருடி. கல்யாணத்தைக் காலம் தாழ்த்திப் பண்ணினாலும் பண்ணலாம். காதலைக் காலா காலத்திலே பண்ணணும். ஆமா, யாரைக் காதலிக்கலாம்னு சொல்லேன்டி.'

'வந்து... அனுஷா, எங்க லெக்ஷரர் பத்மநாபனைப் பற்றி என்ன நினைக்கறே?'

'யாரு இரசாயனமா? ஐயே, அஸிட் குடிச்சவர்மாதிரி இருக்குமே அவர் மூஞ்சி '

'அப்படியா. சரிவிடு. விலங்கியல் லெக்ஷரர் மிஸ்டர் வேணு கோபால் பற்றி...?'

'அவரைத்தான் மிருகக் காட்சிச் சாலையிலேயே பார்க்கலாமே. அதுகளெல்லாம் வேணாம்டி... ம்.. ஏன்டி சரோ, எங்க தாவர இயல் லெக்ஷரர் பற்றி நீ என்ன நினைக்கறே?'

'யாரு, மிஸ்டர் அமலனா. அவர் சாதரண ஆளில்லேடி. அசல் நெருப்பு. அப்படியே பொசுங்கிப்போயிடுவே, ஜாக்கிரதை!'

'ஓஹோ, நெருப்பா அவரு. ரொம்ப நல்லதாப் போச்சு. காதல் கனியறதுக்கு நெருப்புத் தான்டி முக்கியம். அதுவும் என்னுடைய அழகிலே அவருடைய நெருப்பெல்லாம் அப்படியே அவிஞ்சுபோயிடாது? வேணுமின்னு நீ இருந்துபாரு. நான் அவரையே காதலிச்சு அந்த நெருப்பை என் பின்னாடியே சுத்த வெக்கலே நான் அனுஷா இல்லே.' சபதம் செய்தாள் அனுஷா.

சிறிது நேர சிந்தனைக்குப் பின் நான் முடிவாகக்கூறினேன்:

'அனுஷா, இம் முடிவுக்கு நீ வந்துவிட்ட பிறகு நான் அதிகம் சொல்ல விரும்பல்லே. இருப்பினும் ஒண்ணு மட்டும் சொல்றேன். நீ அழகிதான். ஆனால் அழகாலே மட்டும் பெண்கள் எதையுமே சாதிச்சிட முடியும்னு மட்டும் எண்ணாதே. அதுமட்டுமல்ல, காதல் என்பது ஒரு புனிதமான தெய்வீக அன்பு. எத்தனையோ தியாகங்களின் அடிப்படையில்தான் காதல் உருவாகி மணம் பெறமுடியும். அதை விடுத்து உன் விளையாட்டுத் தனத்தில் காதலையே வேடிக்கைப் பொருளாக்கி உன் வருங்காலத்தையே பலியிட்டிடாதே. அவ்வளவுதான்.'


'ஏது கீதோபதேசமா? அதுக்கு யாரும் அருச்சுனனைப் பாரு. இந்த அனுஷாகிட்டே வேணும். நான் வர்ரேன்.' அனுஷா விரைந்து சென்றுவிட்டாள்.

+

மறுநாள் போயா விடுமுறை தினம். மாலை ஏழு மணியளவில் திடீரென்று அனுஷா என் ஹாஸ்டல் அறைக்குள் நுழைந்தாள். அவள் கோலத்தைக்

## வாழி குழந்தாய்!

செம்பவளச் சிறுநிலவு!
செவ்வந்திச் சின்னமுகை!
கண்பறிக்கும் இளஞ்சிறுமி!
கற்கண்டுப் பெண்கொழுந்து!
தன் பிறந்த நாள் மகிழும்
தங்கமணிப் பொழுதினிலே
'அன்பரசி வாழி!' என
அகமகிழ வாழ்த்துகிறோம்!



பெயர்: அன்பரசி குமாரசுவாமி. (நிற்பவர்)
விலாசம்: 'முல்லை' கரணவாய் தெற்கு, கரவெட்டி
பிறந்த திகதி: 10-2-66 (4-வது பிறந்த தினம்)

சிறுவர்களின் பிறந்தநாளை சிரித்திரனுக்கு அறியத் தாருங்கள். அத்தோடு அவர்களின் புகைப்படங்களையும் அனுப்பிவையுங்கள். சிரித்திரன் கவிதை வாழ்த்தை உங்கள் சிங்காரச் செல்வர்களுக்கு வழங்குவோம்,

கண்டு ஒரு கணம் நானே மயங்கி விட்டேன். நானும் ஒரு பெண் தான். இருப்பினும் மற்றைய பெண்களின் அழகையும், புடவைகளையும் பார்த்துப் பொருமைப் படுபவளல்ல. இருந்தாலும் அன்று அனுஷாவின் அழகையும் அலங்காரத்தையும் பார்த்து என்னால் பொருமைப் படாமல் இருக்க முடியவில்லை. உடம்போடு ஒட்டிய மெல்லிய காஸ்மீரப் பட்டுப் புடவை. கை நிறைய வளையல்கள். தளதள வென்று பின்னிவிடப்பட்ட கூந்தலில் தலைகொள்ளாமல் பல் வேறு மலர்கள். மொத்தத்தில் சர்வாலங்கார தேவியாக, அழகின் பிம்பமாகக் காட்சியளித்தாள் அனுஷா. அறைக்குள் நுழைந்த ஒருகணம் ஏதோ ஒரு மயக்கநிலையில் என்னையே பார்த்தவண்ணம் நின்றவள் திடீரென்று என் கால்களில் வீழ்ந்தாள்.

'என்னடி இது?' பதறிப் போய்க் கேட்டேன் நான்.

'என்னை ஆசிர்வதியடி!'

'என்னடி விசயம். அதைச் சொல்லலியே.'

'முதல்லே ஆசிர்வதி: அப்புறம் எல்லாம் விபரமா சொல்றேன்.'

'சரி, மங்களம் உண்டாகட்டும்!'

'போடி பெரிய இவ... காதல் வெற்றிபெற ஆசீர்வதியடி.'

'ஓஹோ! நீ இன்னமும் அந்த உலகிலேதான் இருக்கியா. சரி, சீக்கிரமே காதலித்து போரடிக்காமல் நேரத்தை வீணாக்கக் கடவாய்! எழுந்திரு.'

'அது போதும்.' என்று கூறியபடி துள்ளியெழுந்தாள் அனுஷா.

இருவரும் அருகருகே அமர்ந்தோம். அனுஷா பேச்சை ஆரம்பித்தாள்.

'சரோ, ஒவ்வொரு நாளும் மாலை மிஸ்டர் அமலன் பேராதனை பூங்காவுக்கு வாக்கிங் போவாரில்லையா. அதை மனதிலே வெச்சிட்டு நானும் இன்று மாலை பார்க்குக்குப் போயிருந்தேன்.'

'அதுக்கேன்டி இந்த அலங்காரமெல்லாம்?'

'உனக்கொண்ணுமே புரியாதடி. எல்லாம் காரணமாத்தான். இப்படி அலங்காரம் பண்ணிட்டுப் போனாற்தான் எந்த ஆம்பளையாயிருந்தாலும் பின்னாலேயே வருவாங்களாம். குமுதத்திலே போட்டிருந்தாங்க.'

'ஓஹோ, குமுதம் காட்டிய வழியா. சரி, அப்புறம்?'

'பார்க்கிலே பாதையோரமா ஒரு சின்னப் பூஞ்செடியிலே ஒரு இலையைப் பிடிச்சு ரொம்ப நேரமா என்னவோ

பார்த்திட்டேயிருந்தார் மிஸ்டர் அமலன். நானும் இதுதான் தருணமின்னு அதே செடியருகே போய் ஒரு மலரைத் தொட்டுப் பார்க்குமாப்போல நின்னேன்.'

'சரிதான், காளை இலையைப் பார்க்க, பூவை பூவைப் பார்த்தாளா?' என்ன! நான் தொடர்ந்து, 'அது சரி, அவர் உன்னைப் பார்த்துச் சிரித்தாரா?' என்று கேட்டேன்.

'அதுதான் இல்லையேடி. இருந்தாலும் ஒரு ஐந்து நிமிஷம் அப்படியே நின்னேன். அவர் கடைக்கண்ணுலே கூடப் பார்க்கவேயில்லே. எனக்கு ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்திடிச்சு. உடனே ஒண்ணுமே பேசாமல் அவருக்குப் பின்காட்டி நின்னுண்டு ஒரு சின்னக் கல்லையெடுத்து டொக்குன்னு அவர்மேலே வீசியெறிஞ்சிட்டு விறுவிறென்று திரும்பியும் பாராமல் நடக்க ஆரம்பிச்சேன்.'

'ஐயையோ! அப்புறம்...?'

'அப்புறம் என்னடி, ஒரு கொஞ்சத் தூரம் போனதும் லேட்டா திரும்பிக் கடைக் கண்ணுலே பார்க்கறேன், அவர் என் பின்னுலேயே ஒரு பத்து யார் தூரத்திலே தொடர்ந்து வந்திட்டிருக்கார்.'

'அப்போ, மீன் தூண்டில் முள்ளைக் கௌவிடிச்சின்னு சொல்லு.' நான் தூண்டுகிறேன்.

'முழுவதும் கேளேன்டி. அவர் என்னைத் தொடர்ந்து வர்ரப்போ எனக்குச் சந்தோஷம் தாங்கமுடியலே. அவர் முதல்லே என்னை அலட்சியப்படுத்தினதுக்கு நானும் அவரை அலைய விடணுமின்னு நெனச்சிட்டு தொடர்ந்து நடந்திண்டேயிருந்தேன்.'

'ஐயோ பாவம்டி.'

'கேளேன்டி கதையை. அந்தப் பூங்காவிலேயுள்ள அத்தனை பாதைகளிலும் நடந்திட்டேன். அப்பவும் அவர் என்னை விட்டபாடில்லே. எனக்கு ஒரே மகிழ்ச்சிதான். இருந்தாலும் ரொம்ப நேரமா அவர் என்னைத் தொடர்ந்து வந்திட்டேயிருந்தாலே எனக்கு ஒருவித பயமும் வந்திடுத்து. அவ்வளவு நேரமும் அப்படிப்பட்ட ஒரு காதல் வேகத்திலே என்னைப் பின்தொடர்ந்தவர் எங்கே ஒருவேளை அந்த இடத்திலேயே என்னை வந்து கட்டியணைச்சிடுவாரோன்னு பயந்திட்டேன்.

'ச்சு... ச்சு! அப்புறம்?'

'அவரை மேலும் ஒரு டெஸ்ட் வெச்சுப் பார்ப்போமின்னு நெனச்சு திடீரென்னு ஒரு கொஞ்சத் தூரம் ஓடியிட்டு நின்னு மெதுவாத் திரும்பிப் பார்க்கறேன்...'

'ம்'

'அவரும் என்னைத் தொடர்ந்து ஓடி வந்தவர் பாதி தூரத்திலே ஒரு இடத்திலே மரமாட்டம் நின்னுட்டார். நான் ஓடினப்போ என் கொண்டையிலேயிருந்து ஒரு மலர் நிலத்திலே விழுந்திருக்கு. அதை அப்படியே வெச்ச கண் வாங்காமல் பார்த்திட்டேயிருந்தார். அப்புறம் குனிந்து அதைக் கையிலெடுத்து ஏதோ மயக்க உலகத்தில் இருப்பவர் மாதிரி மீண்டும் அதையே பார்த்திண்டிருந்தார். என் காதல் நினைவாக வெச்சிண்டிருக்காருன்னு நெனச்சிட்டு அவரை அதே மோனநிலையிலே விட்டிட்டு நான் வந்திட்டேன்.'

'அப்படியா சங்கதி. பெரும் நெருப்பையே வெறும் கரித்துண்டமாக்கிட்டே. சரி, எதற்கும் பொறுத்திருந்து பார்ப்போம்.'

'இனியென்னடி பார்க்கறது. நாளை காலை லெக்ஷர் பண்ண அவர் வகுப்புக்கு வர்ரப்போ பாரேன், என்னை என்ன பார்வை பார்க்கிறாரின்னு.'

'சரி பார்த்திடலாம்' என்றபடி மேலும் தொடர்ந்தேன். 'ஆமா, இப்படித் தலைகொள்ளாமல் பூ வெச்சிருக்கியே, இத்தனை பூக்களும் உனக்கெங்கிருந்தடி கெடச்சுது?'

'அதுவா? இன்னிக்கு மத்தியானம் நுவரேலியாவிலிருந்து, எங்க அண்ணா என்னைப் பார்க்க வந்திருந்தாரில்லையா. அவர் தான் இதெல்லாம் கொண்டு வந்தார்.'

---

ஒருவர்: அண்ணே எனக்கு ஒரு பத்து ரூபா கடன் தாருங்கோ நாளைக்குத் திருப்பித் தருகிறேன்.

மற்றவர்: உன்னை யாரென்று தெரியாதே. எப்படிக் கொடுப்பது?

ஒருவர்: அதனாற்தான் கேட்கிறேன்.

—சித்தன்கேணியூர் அ. பற்குணு.

---

'தங்கை தொடுத்த மலர்க் கணை, அண்ணன் தந்த அன்பளிப்பா!'

சிறிது நேரத்தின் பின் அனுஷா சென்றுவிட்டாள்.

+

மறுநாள் காலை.

தாவர இயல் லெக்ஷரர் மிஸ்டர் அமலனின் வருகைக்காக எல்லோரும் லெக்ஷர் ஹாலில் காத்திருந்தோம். குறிப்பிட்ட நேரத்திற்கு மிஸ்டர் அமலன் வந்தார், கையில் ஒரு சிறிய அட்டைப் பெட்டியுடன். பெட்டியைப் பத்திரமாக மேசைமேல் வைத்துவிட்டுப் பேச்சை ஆரம்பித்தார்.

'என் வாழ்க்கையில் நேற்றைய தினம் ஒரு முக்கியமான நாள். ஒரு பொன்னான் என்றே குறிப்பிடலாம். எத்தனையோ காலங்களாக நான் கண்டுவந்த கனவு நேற்று மாலைதான் நனவாகியது...'

அனுஷாவை அர்த்த புஷ்டியுடன் கவனித்தேன். அவள் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. அமலன் தொடர்ந்தார்.

'பன்னிரண்டு ஆண்டுகளுக்கொருமுறை மலரும் ஒருவித மலரைப் பற்றி சென்ற வாரம் உங்களுக்குக் கூறியிருந்தேன். ஆயினும் அம்மலரை உங்களுக்குக் காட்டமுடியவில்லை' ஏன் நானே அதன் படத்தைப் பார்த்திருக்கின்றேனே தவிர நேற்றுவரை அம்மலரைப் பார்த்ததேயில்லை. மிக உயரமான மலைப் பிரதேசங்களில்தான் அம்மலர் மலரும். அது மலரவேண்டியதும் இந்த ஆண்டுதான். நான் எத்தனையோ இடங்களில் தேடியும் அகப்படாத அம்மலர் நேற்று மாலை வலிய என் கைக்குக் கிடைத்தது. இதோ, இப்பொழுது நீங்களும் அம்மலரைப் பாருங்கள்.' என்று கூறிவிட்டு அட்டைப் பெட்டியைத் திறந்து அதற்குள்ளிருந்து ஒரு வட்டமான கண்ணாடிக் குமிழைப் பத்திரமாக எடுத்து மேசைமேல் வைத்துவிட்டு,

'இதுதான் அந்தக் குறிஞ்சி மலர்!' என்றார்.

அமெரிக்காக்காரன் கொண்


நேரம் காட்டுங் கடிகாரத்தைப்
பணங் கொடுத்து வாங்கலாம்!
நேரத்தைப் பணங் கொடுத்து
வாங்க முடியுமா?
நேரத்தின் மகிமையை உணர்ந்து தயாரிக்கப்பட்டதே,

மில்க்வைற் சலவைப் பவுடர்

துரிதமாகவும், தூய்மையாகவும் சலவை செய்வதற்கு
மில்க்வைத் சலவைப் பவுடரைப் பாவியுங்கள்

**மில்க்வைற் சலவைப் பவுடர்**




ஒரு பைக்கற் மில்க்வைற் சலவைப் பவுடரின் விலை சதம் 35 மட்டும்.

பாவித்த 10 வெற்றுறைகளைச் சேகரித்து 1970-ம் ஆண்டு மில்க்வைற் கலண்டரை இனமாகப் பெறுங்கள்.

**மில்க்வைற் சோப் தொழிற்சாலை**

தொலைபேசி: 7233

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

'தந்தி: மில்க்வைற்'

டுவந்து காட்டிய சந்திரக்கல்லைப் போல் அக்கண்ணுடிக் குமிழுக்குள் நடுநாயகமாக விளங்கியது அந்த அழகான குறிஞ்சிமலர்.

அமலன் மீண்டும் தொடர்ந்தார்.

'நேற்று மாலை பூங்காவில் நிற்கும்பொழுது ஒரு கூந்தலில் இந்த மலர் சூடியிருப்பதைத் தற்செயலாகக் கவனித்தேன். உடனே அந்த மலர்க்கொத்தையே பின்தொடர்ந்தேன். வெகு நேரமாகப் பின்தொடர்ந்தேன். முடிவில் ஆண்டவனே பார்த்து இரங்கினுற்போல் ஒரு மலர் தானுகவே கழன்று நிலத்தில் வீழ்ந்தது. அதுதான் இந்த மலர்.'

'ஏன் சார், மலர் சூடிய கூந்தலென்றுல் அதற்குரியவர் ஒரு பெண்ணுகத்தானே சார் இருக்க வேண்டும்?' யாரோ ஒரு குறும்புக்கார மாணவனின் கேள்வி.

'அப்படியும் இருக்கலாம். ஆனுலும் அக் கூந்தலுக்குரியவரை நான் பார்க்கவில்லையே. அந்த மலர் மட்டுந்தான் என் கண்களுக்குத் தெரிந்தது... அது நிற்க, பாடத்திற்கு வருவோம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கொரு முறைதான் இக் குறிஞ்சிமலர் மலரும். இந்தச் செடி எந்த வகுப்பைச் சேர்ந்ததென்றுல்... அமலன் பாடத்தைத் தொடர்ந்தார்.

எனக்கருகேயிருந்த அனுஷா ஒரு காகிதத்தில் ஏதோ எழுதி என்னிடம் நீட்டினுள். படித்துப் பார்த்தேன்.

'பன்னிரண்டு ஆண்டுகளில் குறிஞ்சி மலரலாம். ஆனுல் பன்னிரண்டு நூற்றுண்டுகள் கழிந்தாலும் இந்த மண்டூகத்தின் மண்டையில் காதல் மட்டும் மலராது!'

□ □ □ □ □ □

# மாத்திரைக் கதை

அடுப்பங்கரையில் கிழவியும், பேத்தியும் வடைப்பருப்பை அம்மியில் இட்டு குழவியால் அடித்து அரைத்துக்கொண்டிருந்தார்கள். அம்மியும் குழவியும் அடிபட்டு மோதிக்கொண்டிருந்தன. இடையிடையே கிழவியும் பேத்தியும் அரைபட்ட பருப்பை எடுத்து வாயில்வைத்து ருசி பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

மூலையில் இருந்த அடுப்பு இந்தக் காட்சியைப் பார்த்தது. அம்மியையும் குழவியையும் மோதவிட்டு, கிழவியும் பேத்தியும் ஆதாயம் பெறுவது அடுப்புக்கு வேதனையையும் ஆத்திரத்தையும் உண்டாக்கியது. பக்கத்திலிருந்த சட்டியைப் பார்த்து அது பொருமலோடு கூறியது:-

'அம்மிக்கும் குழவிக்கும் அடிபிடி, ஆச்சிக்கும் பேத்திக்கும் வடைருசி.'

—காசி ஆனந்தன்

---

## திருமதி ஒய்யப்பங்கங்காணியார் [பருவதாச்சி]

—குறிஞ்சிதாசன்

நானு என்ட புருசன போல வலவலன்னு ஸ்பீச்சி குடுக்க வல்லிங்க. இந்த மனுசன எங்க காணுமினு தேடுவீகளோன்னு ஒரு பேச்சிக்கு சொல்லிபுட்டு போகலாமுனு வந்தேனுங்க.

மழையோ மழை கொட்டோ கொட்டுன்னு கொட்டிச்சி, அதான் ஒங்களுக்கெல்லாம் தெரியுமே. இருந்தாலு இந்த மனுசன் வூட்டுல இருந்தாதானுங்களே. என்னுமோ பெரிய ரெஸ்பேட்டா எலந்தாரி கணக்கா வெளியே கெளம்பீட்டாக. மழையில நல்லா நனைஞ்சி இப்ப இழுத்துக்கிட்டாக. இப்ப எனக்கில்லிங்களா எல்லா ரோதனையும்!

சொரத்தோட கெடக்குற மனுசனுக்கு கொத்தமல்லி தண்ணி குடுத்தா, கொடுவா கருவாடு சூப்பு வேணுங்களாம். எப்புடீங்க கதி வித்தத்தடி மாமி கொத்துதடி கோழின்னுனும்,

அவுக இன்னும் ரெண்டுமூனு நாளயில சொகமாகிடுவாக. அதுக்குப் பொறகு ஒங்களையெல்லாம் சந்திப்பாக. நானு வாரேனுங்க அடுப்புல ஒல கொதிக்குது.

# என்னைத் தேடியாம் வந்தவள்!

[ ஏ. இக்பால் ]

என்னைத் தேடியாம் வந்தவள் - இன்னும்
என்னைத் தேடியே நிற்கிறுள்.

மின்னும் செவ்விதழ் மினுங்கித் துன்னுதல்
இன்னுமிடை சரிந் தேனே ஆடுதல்
பண்ணு மசைவுகள் படிந்து விம்மியே
என்னைச் சேர்க்கவே இன்னும் நிற்கிறுள்!

என்னைத் தேடியாம் வந்தவள் - இன்னும்
என்னைப் பார்க்கவே நிற்கிறுள்.

அண்மி எத்தனை ஆரணங்குகள்
கண் சிமிட்டலால் கனிந்த பார்வையால்
தண்ணுடல் தரும் தாக வேகத்தால்
என்னைச் சேர்த்திட இங்கு வந்தனர்!

என்னைத் தேடியாம் வந்தவள் - இன்னும்
என்னை ஏற்கவே நிற்கிறுள்.


கன்னி எத்தனை கட்டுடல் தனை
என்சுவை தனுக் கேற்றதோ எனச்
சந்நிதி தன்னில் தட்டிப் பார்த்தபின்
நண்ணி விட்டவன் நானே வேண்டுமாம்!

என்னை அடிமையா யாக்கியே - இன்னும்
என்னிலுயரவே பார்க்கிறுள்.

வந்துநின் றசை வளைந்த வடிவினர்
நொந்திடா துயர் நெளிவு சுளிவுகள்
அந்த மாதியாய் அளைந்து பார்த்துமே
என்னுளத் தினுள் ஏறி ஊர்கிறுர்!

என்னை ஆட்கொள வந்தவள் - இன்னும்
என்னை ஆட்டியே நிற்கிறுள்.





# பள்ளிப் பகிடி

## அப(ச்) சாரம்

சென்ற வருடம் நான் க. பொ. த. வகுப்பில் கல்வி கற்று வந்தேன். இரசாயன பாடத்தின் 'சிலபஸ்' படித்து முடியாத படியால், எங்களுக்கு இரசாயனம் கற்பிக்கும் ஆசிரியர் போயா தினங்களிலும் மேலதிக இரசாயன வகுப்புகளை நடத்திவந்தார். இவ்வகுப்புக்கு வருபவர்களில் சிலர் காற்சட்டையும், வேறு சிலர் சாரமும் அணிந்து வருவது வழக்கம்.

ஒரு நாள் வகுப்பிலேயே கிறுக்கன் என்று பெயர் பெற்ற கந்தசாமி என்ற மாணவன் பழையகாட் சாரம் அணிந்து வந்தான். அது புதியதாகவும், அழகாகவும் இருந்தது. நாங்கள் எல்லோரும் அவனைச் சூழ்ந்து கொண்டு, கூ! அவனுக்கென்ன, 'பழைய காட்' சாரம் எல்லே உடுத்திருக்கிறான்' என்று சொல்லிக் கேலி செய்தோம்.

சிறிது நேரம் செல்ல கர்! கர்! என்ற சத்தத்துடன் இரசாயன ஆசிரியர் மோட்டார் சைக்கிளில் வந்து இறங்கினார். உடனே நாங்கள் எல்லோரும் 'கப்சிப்பென' அமைதியாக வகுப்பறையில் இருந்தோம். பின் ஆசிரியர் எங்கள் வகுப்பறையுள் வந்ததும் நாங்கள் எழுந்து நின்று 'குட் மோர்னிங் சார்' என்றோம். அவரும் 'குட் மோர்னிங், சிட்டவுன்' என்னார். பின்பு 'இன்று அமோனியா வாயுவைப் பற்றிப் படிப்போம்' என்று கூறி விட்டு 'இதை தயாரிக்கத்தேவையான பொருட்களில் ஒன்று அமோனியம் குளோரைட்டு அதாவது 'நவச்சாரம்' என்று தொடர்ந்தார். இடையிற் கந்தசாமி பராக்காக இருப்பதைப் பார்த்துவிட்டு 'கந்தசாமி என்ன சாரம்' என்றார். கந்தசாமி தான் உடுத்திருந்த சாரத்தைத்தான் என்ன சாரம் என்று கேட்கிறார் என்ற நினைப்பில் 'அது பழையகாட் சாரம் சேர்' என்றான். உடனே ஆசிரியர் உட்பட நாங்கள் எல்லோரும் விழுந்து விழுந்து வயிறு குலுங்கச் சிரித்தோம். ஆனால் கந்தசாமி திருதிருவென விழித்தான். அதைப்பார்க்கப் பார்க்க எங்கள் சிரிப்பு மேலும் அதிகமாயிற்று.

—செல்வன். ச. குகதாசன்
திருநெல்வேலி கிழக்கு.

## கணக்கு ராணி

நான் எங்கள் ஊர் கல்லூரியில் எட்டாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த காலம். முதல் பாடம் முடிவதற்கான மணி அடித்து விட்டது. அடுத்த பாடம் கணக்கு. முதல் நாள் புதுப் பாடம் கணக்கில் விளங்கப்படுத்தியிருந்தார், கணக்கு ஆசிரியர். அதில் வீட்டுக் கணக்குகள் பத்து செய்து கொண்டு வரும்படி தந்திருந்தார். வகுப்பில் முழுக்கக் கணக்குச் செய்தவர்களிடம் கொப்பியை வாங்கி செய்யாதவர்கள் 'கொப்பி' பண்ணிக் கொண்டிருந்தார்கள். எனக்குப் பக்கத்தில் இருந்த ஸ்ரீராணி என்ற மாணவியின் கொப்பியை வாங்கிப்பார்த்தேன். வீட்டுக்கணக்கு ஒன்றுமே செய்திருக்கவில்லை. ஸ்ரீ ராணி கணக்கில் கெட்டிக்காரி. துடுக்குத்தனம் அவளிடம் நிறைய உண்டு. கணக்கு ஏன் செய்யவில்லை என்று நான் அவளைக் கேட்டேன். அவளோ பேசாமல் இருந்தாள், கணக்கு ஆசிரியரும் வகுப்புக்கு வந்து சேர்ந்தார். வந்தவுடன் 'நேற்று வீட்டுக் கணக்குகள் தந்திருந்தேனல்லவா ஒவ்வொருவராகக் கொப்பிகளைக் கொண்டு வாருங்கள்' என்று சொல்லிவிட்டு கொப்பிகளைத் திருத்தினார். ஸ்ரீ ராணியின் முறை வந்ததும் அவள் எழும்பி நின்றாள். 'கொப்பியைக் கொண்டு வாரும்' என்று ஆசிரியர் கூறினார். 'கணக்கு ஒன்றும் செய்யவில்லை' என்று துணிவுடன் சொன்னாள். ஏன் செய்யவில்லை என்று ஆசிரியர் காரணம் கேட்க, அவளும் 'கணக்குகளைச் செய்து பார்த்தேன். ஆறு கணக்குகள் எனக்குச் செய்யத் தெரியும். தெரிந்தவைகளை ஏன் செய்வான் என்று அவைகளைச் செய்யவில்லை. மற்றைய நான்கு எனக்கு விளங்கவில்லை அதனால் அவைகளையும் செய்யாமல் விட்டுவிட்டேன்' என்று காரணம் கூறினாள்.

—மின்மினி நவரட்ணம்
அல்வாய் வடக்கு

## ம்ன்னிக்க வேண்டுகிறேன்

அன்று எங்களுடைய பாடசாலைக்கு கல்வி அதிபர் வந்திருந்தார். எங்கள் பாடசாலை சைவ பாடசாலையானபடியால் எஸ். எஸ். சி. வகுப்பு மாணவர்கள் எல்லோரும் வேஷ்டி கட்டிக் கொண்டே பள்ளிக்கூடம் செல்வோம். பெண் பிள்ளைகளும் எங்களது வகுப்பில் இருந்தனர். எங்களது கல்வி அதிபர் முதலில் எங்களுடைய வகுப்பிற்கே வந்தார். எங்களுடைய வகுப்பு 'கறிக் கடைபோல்' ஒரே இரைச்சலாக இருந்தது. காதைப் பொத்திக் கொண்டே நிற்க வேண்டிய அளவு சத்தமாக இருந்தது. கல்வி அதிபர் வந்ததை எங்கள் வகுப்பிலுள்ள ஒருவரும் கவனிக்க வில்லை. அவர் தனியாக, நடந்தே வந்தமையால் நாம் கவனிக்கவில்லை. அவர் வந்து எம் வகுப்பைப் பார்த்துவிட்டு, ஆசிரியர் கதிரையில் இல்லாதபடியால் கோபம் கொண்டார். அவர், முன்வரிசையிலிருக்கும் ஒரு உயர்ந்த மாணவர் இன்னொரு மாணவருடன் கதைத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். உடனே அந்த உயர்ந்த மாணவனின் காதைப்பிடித்து கதிரையில் ஏற்றிவிட்டு எம்மைப் பார்த்து 'போய் உங்கள் வகுப்பு ஆசிரியரைக் கூட்டிக் கொண்டு வாருங்கள்' என்றார். இவையெல்லாம் சில நிமிடங்களுக்குள் நடந்து முடிந்து விட்டன. எங்களது வகுப்போ மரண அமைதியாக இருந்தது. வகுப்பாசிரியரைக் கூட்டிக் கொண்டு வாருங்கள் என்றதும் நாமெல்லாம் வகுப்பில் முன்வரியில் கதிரையில் ஏறிநிற்பவரை அண்ணாந்து பார்த்தோம். கதிரையில் ஏறி நின்றவர் கழுத்தைத் தொங்க விட்டவண்ணம் கல்வி அதிபரின் அருகில் சென்றார். அவர்தான் வகுப்பாசிரியர் என்றறிந்ததும் கல்வி அதிபர் சிரித்துக் கொண்டே 'சொறி' என்றார். இவையெல்லாம் நடந்தபின்னும் எம் வாய் சும்மா இருக்குமா? நாமும் விழுந்து, விழுந்து சிரித்தோம்.

—முருங்கன் மகேஸ்வரன்—



## புவியியலில் நெப்போலியன்

அன்று எங்களுக்குப் புவியியல் பாடம் நடந்துகொண்டிருந்தது எமது ஆசிரியர் இடை இடையே பாடத்தில் கவனம் செலுத்தாத மாணவர்களிடம் கேள்வி கேட்பது வழக்கம். பாடத்தில் கவனம் செலுத்தாமல் இருந்த புவாத் என்ற மாணவனிடம் ஆசிரியர் 'வெலிங்டன்' எதற்குப் பெயர் பெற்றது? என்று கேட்டார்.

அம்மாணவன் விடை தெரியாமல் விழிக்கவே, தெரிந்தவர்கள் கூறலாம் என்றார். புவியியல் பாடத்தில் மிகவும் மோசமான ரவுப் என்ற மாணவன் எனக்குத் தெரியும் சார் என மகிழ்ச்சியுடன் இரண்டு கைகளையும் உயர்த்தினான்.

ஆசிரியரும் மிகவும் மகிழ்ச்சியுடன் 'சரி சரி ரவுப் சொல் பார்ப்போம்' என்றார்.

எழுந்து நின்று இருகைகளையும் மேசையில் வைத்துக் கொண்டு,

'என் தம்பி' பணமா? பாசமா? 'ஒளிவிளக்கு' போன்ற வெற்றிப்படங்களைத் திரையிட்ட நம்மூர் 'வெலிங்டன்' தியேட்டர் தான் ஸார். என்று சொல்லி முடித்ததுதான் தாமதம் வகுப்பில் சிரிப்பொலி எழுந்தது.

—எச். எம். எம். கலீல்
மாவத்தப்பொலை

# பழி

கூடலூர்
சாந்தன்

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

தான் வஞ்சிக்கப் பட்டதை உணர்ந்தாள் கமலம். என்ன பலன்? காலம் கடந்தது. கமலத்தின் கையிலே தவழ்ந்தது ஒரு பெண் குழந்தை. பாவத்தின் சின்னந்தான். ஆனால் அவள் உதிரத்தில் வளர்ந்த தளிரல்லவா அது. அவள் உடலிலோடும் இரத்தம் தானே அது.

தன் முன்னால் விரிந்திருக்கும் வஞ்சக உலகை அறியாது புத்துலகைக் கண்ட பூரிப்பில் பொக்கை விழச் சிரிக்கின்றது தூசு படாத அந்தப் பசுந் தளிர். அதன் சிரிப்பின் நிழலிலே ஆறுதல் பெறுகின்றாள் அன்னை. 'செல்வி' என்று செல்லமாகப் பெயரிட்டு அழைக்கிறாள்.

அடுத்த கணம் ... தான் செய்த பாவத்தைப் பறைசாற்றும் ஈனச் சின்னமல்லவா என்று திடுக்கிடுகிறாள்.

கட்டிக்காத்த மலர் சூறையாடப்பட்டுவிட்டதை, சூத்தையாக்கப்பட்டதை, கசக்கியெறியப்பட்டதை அறிந்த பார்வதியால் வேதனையைத் தாங்க முடியவில்லை. பழியைப் போக்க வந்தவள், பழி சுமந்து நிற்கிறாளே! தன் முயற்சியெல்லாம் வீணாகிவிட்டதேயென்று வேதனையாற் துடித்தாள். அந்த வேதனையே அவளைப் பலிவாங்கிவிட்டது.

காறித் துப்பியது சமூகம். பாவக்கொட்டை போடச் சுரைக் கன்று முளைக்கும். தாயைப் போலவே இவளும் தளுக்குக்காரி என்றது. பசி தீரு மட்டும் வாயிற் போட்டுக் கொண்டது.

உலகத்தின் தூற்றலால் கமலத்தின் புண்பட்ட இதயம் வேதனையால் துடித்தது. செய்வதறியாது கலங்கினாள். தற்கொலைக்கும் தத்துவம் கற்ற அவள் அறிவு இடங்கொடுக்கவில்லை. இருந்த ஒரு பந்தமும் முடிந்துவிட்டது. இனி இருக்கும் ஒரே பந்தம் அதுதான் குழந்தை செல்வி.

தான் செய்த பழிக்காக அந்தப் பச்சைக் குழந்தையைப் பலி கொடுக்க எந்தத் தாயின் உள்ளந்தான் இடங்கொடுக்கும். பிள்ளைப் பாசம் உந்தியது. மீண்டும் வேலை தேடிப் புறப்பட்டாள்.

முன்பு வேலை பார்த்த இடத்தில் வேலை கிடைக்கவில்லை. பழிகாரி என்ற பழிப்புத்தான் கிடைத்தது.

எட்டிநின்ற ஓநாய்கள் கிட்ட நெருங்கி வந்தன. ஆதரவற்றிருக்கும் ஆட்டை இரையாக்க எண்ணி.

ஃ

வேலை தேடிச்சென்ற இடத்தில் ஒரு சீமான். எத்தனையோ இளம் பெண்களைத் தன் ஏமாற்றுவலையில் வீழ்த்திய எத்தன்.

'ஐயா நான் ஏழை; அநாதை. இந்தக் குழந்தையின் பசியைப் போக்கிட உடல் வருந்தி ஊதியம் பெற ஒரு தொழில் தாருங்கையா' என்றாள்.

ஐயோ பாவம்! பாவை நீ வேலை செய்யவேண்டாம், காசு தருவேன்' என்றான்.

என்ன இரக்க சிந்தனை!

'ஒரு நிபந்தனை' என்றான்.


என்ன...?

என் கட்டிலுக்கு அணிசெய் கட்டழகி. உன் கடைக் கண்ணைத் தா. காசு தருவேன். உனக்கென்ன காசுதானே தேவை' என்றான்.

கெடுமதியாளனின் கேடுற்ற வார்த்தை கேட்டுச் சீற்றமெடுத்தாள் கமலம். கண்டவுடன் காமுறும் காமுகா உன் கண் கெட்டுவிடும் என்று சீறினாள்.

'நீயென்ன வாலிபரை வலை வீசும் விலைமாது தானே?' ஏளனம் அவனுக்கு...






ஆனால் அந்த ஏழைக்கோ அந்த வார்த்தையைத் தாங்க முடியுமா? குமுறினாள் கொந்தளித்தாள். வேதனையின் வெம்மையைத் தாங்காது கலங்கினாள்; கதறினாள்; துவண்டாள் என்ன பயன்...

'பெட்டைக் கோழி கூவிப் பொழுது விடியுமோ?' 'பெண் நாய் குரைத்தாலும் கடிக்காது' என்ற உலகோரின் காதில் அவளின் அவலக் குரல் ஏறுமா?

இந்த நிலையில் கண்டாள் தன் கற்புக் கவர்ந்த கண்ணனை. காலில் விழுந்து வேண்டினாள், கதியற்ற குழந்தையைக் காப்பாற்றும்படி. தன்மீது பட்ட கறையைப் போக்கும்படி கண்ணீர் விட்டாள்.

அந்தக் கல் நெஞ்சுக் காரனின் இதயம் இளகவில்லை. முகர்ந்து வீசிய எத்தனையோ மலர்களில் இதுவுமொன்று அவனுக்கு. அவளுக்கோ அவன்தான் ஒரு கணவன்.

'நீ வேசி மகள். தூர நில்லடி' என்றான்.

கொதித்தெழுந்தாள் மங்கை. 'என் கற்பைச் சூறையாடிய காமுகனே! உன்னைக் கடவுள் கேட்பார்' என்றாள்.

'ஆகா! கண்ணகை பரம்பரையே நீ! நெறி கெட்டவளே' என்றான் அந்த நீசன்.

செய்வதறியாது கலங்கினாள் கமலம்.

'அடி தாயே! நீ செய்த ஈனம் என்னைத் தொடருதடி' என்று கதறினாள். உலகம் சுற்றியது அவளுக்கு. உலகமே எதிர்த்தது அவளை. அந்த அப்பாவியை. கற்பின் செல்வியை. சேற்றிலே முளைத்த செந்தாமரையை.

அதன் எதிர்ப்பைத் தாங்க மாட்டாமல் ஓடுகிறாள்... ஓடுகிறாள் வாழ்வின் ஓரத்தை நோக்கி.

'நில்! எங்கே செல்கிறாய்?'

அவள் அந்தரங்கத்தில் ஒலி எழும்புகின்றது.

பைத்தியக்காரி! இந்தப் பச்சை மண்ணையும் பலிகொடுக்கப் போகிறாயா? குலத்தின் ஒரே சுடரை அணைக்கப்போகிறாயா?

ஆம்... என்னைச் சூழ்ந்த பழி என் செல்வத்தைச் சூழாமல் இருக்கட்டுமே.

அதற்காக....

வாழ்வதற்காகவே தான் அவள் பிறந்தாள்; அழிவதற்காகவல்ல. அப்படியானால் அவள் பிறந்திருக்கவே மாட்டாள். கமலம்! நீ உத்தமி. ஊர் உன்னைப் பழித்தாலும் உன் உள்ளத்திற்கு நீ உத்தமிதான். சட்டப்படி நீ மணம் செய்யவில்லை. ஆனால் நீதான் கற்புக்கரசி. ஒருவனை நேசித்தாய். ஒருவனுக்காகவே கற்பைப் பறிகொடுத்தாய். அந்த ஒருவனைத் தவிர வேறு ஒருவனையும் நீ கணவனாக வரிக்கவில்லை. நீ வாழத்தான் வேண்டும். உன் செல்வத்தை வாழ வைக்கத்தான் வேண்டும். வாழ்ந்து காட்டத்தான் வேண்டும். கெடுமதியாளருக்குப் புத்தி புகட்டத்தான் வேண்டும். உத்தமர்களெல்லோரும் உலகிற்குப் பயந்து கோழைகளாகிவிட்டதாற்தான் உலுத்தர்களால் நிரப்பப்பட்டுவிட்டது உலகம். உளுத்துப்போன சமுதாயத்திற்குப் பயந்துவிடாதே. போ... போய் வாழ்ந்து காட்டு.

கமலம் திரும்புகிறாள். அவள் உள்ளத்தின் வெம்மையை ஆற்றி, புனல் பெருகுகின்றது விழிகள் வழியே.

'அம்மா... ம்மா... ம்மா...' என்று தன் செல்லச் சிறு கை

**கும்தலக்கடி ஹும்மா...**

**பாலு:** ஏன்டா ராமு! நீயும் உன் காதலியுமாகச் சேர்ந்து பார்த்தீங்களே படம், அந்தப் படத்திலே ஏதாவது குத்துச் சண்டை இருக்கா?

**ராமு:** படத்திலே இல்லையடா தியேட்டரிலே இருந்துது.

**பாலு:** ஏன்டா யாராவது ரவுடிப் பயல்கள் கலாட்டா பண்ணினாங்களா?

**ராமு:** இல்லேடா என் காதலியின் அப்பாவும், சகோதரனும் சேர்ந்து 'இன்டர்வல் டைம்' போல வந்து என்னைப் பந்தடிச்சமாதிரி உதைச்சிட்டாங்கடா.

—கைடி

யால் அவள் தோளில் தட்டுகிறாள் செல்வி.

'செல்வி' என்று ஆரத் தழுவி முத்தமிடுகிறாள் தன் செல்வத்தை. இதயத்தில் என்றுமில்லாத சாந்தி நிலவுகின்றது.

ஃ

பொழுது புலர்கின்றது. எங்கும் ஒரே அமைதி. மயான அமைதி. கமலம் கண் விழிக்கிறாள். புது வாழ்வை நோக்கிப் புரட்சிகரமான திட்டம் அவள் உள்ளத்தில். மார்போடு அணைந்துகிடந்த தன் செல்வத்தைத் தட்டுகிறாள். செல்வியின் உடல் சில்லிடுகின்றது. கமலத்தின் இதயம் நடுங்குகின்றது.

செல்வி! செல்வி!!

பதிலில்லை.

இந்த வஞ்சக உலகின் வாழ்வை வெறுத்துப் பறந்துவிட்டாளே, எப்படித் திரும்பி வருவாள்!

பெற்ற வயிறு பற்றி எரிகிறது. ஊட்டிய உதிரம் கொதிக்கிறது.

ஐயோ... செல்வி! செல்வி!!

கமலத்தின் கதறல் எட்டுத்திக்கும் ஓங்காரமிடுகின்றது. அந்தச் சேரியே அதிர்கின்றது. செல்வி வரவில்லை.

அவளை உலகில் வாழவேண்டும் என்று வற்புறுத்திய ஒரே பந்தமும் பறந்துவிட்டது.

செல்வி... செல்வி...

அலறல் காற்று மண்டலத்தைக் கிடுகிடுக்க வைக்கின்றது. வானம் இருளுகின்றது. கொடும் புயல் வீசுகின்றது.

புயல்... புயல்... கொடும் புயல்.

சேரிக் குடிசைகளெல்லாம் பிய்த்தெறியப்படுகின்றன. தடி வேறு தண்டு வேறாக அந்தரத்திலே தூக்கியெறியப்பட்டு காற்றரக்கனின் கரங்களிலே நர்த்தனமாடுகின்றன. மரங்கள் வேர் பெயர்ந்துவிழுகின்றன. ஆடு, மாடு முதலிய மிருகங்களெல்லாம் நாலு பக்கமும் சிதறி ஓடுகின்றன.

மழை...! மழை...!! அடை மழை, பேய் மழை.

உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு சேரி மக்களனைவரும் ஓடுகின்றனர்.

ஆனால்...

கமலம் மாத்திரம் அசையவில்லை. தன் அரும் செல்வத்தை மார்போடு இறுக அணைத்தபடி கொடும் புயலுக்கு ஈடு கொடுத்து கொட்டும் மழையோடு போட்டி போட்டுக் கண்ணீர் பெருக நிற்கிறாள். அவளைப் படைத்த இயற்கையே தன்னை ஏற்றுக்கொள்ளட்டும் என்ற வைராக்கியத்துடன்.

வெள்ளம்...! வெள்ளம்..!!

எங்கும் ஒரே வெள்ளக்காடு. குச்சுக் குடிசைகளும் கூரைகளும் மறைந்துவிட்டன. அந்தச் சேரியை விழுங்கிய எக்காளத்துடன் சிறிப்பாய்கிறான் வெள்ள அரக்கன். அத்தனையையும் அழித்துவிட்ட ஆங்காரத்தில் ஓங்கார ஓசை எழுப்பிப் பாய்கிறான்.

'கோரப் புயல் - கொடும் வெள்ளம்'

பத்திரிகைகள் செய்தி தீட்டுகின்றன. அகதிகளுக்கு உதவ அரசாங்கம் முந்துகின்றது.

வெள்ளம் வடிந்துவிட்டது. கோரப் புயலின் தாண்டவம் ஓய்ந்துவிட்டது. வேடிக்கை பார்க்கும் கூட்டமும், அழிந்த தம் உடைமைகளைச் செபபனிடும் சேரி மக்களுமாக ஆங்காங்கே சனக்கூட்டம் திரளுகின்றது.

ஓரிடத்தில்...

ஏதோ ஓர் இரையைக் கண்டுவிட்டதைத் தம்மினத்திற்கு அறிவித்து, கரைந்து கத்தி வட்டமிடுகின்றன காகக் கூட்டங்கள்.

அதுவென்ன...?

திரண்டு நின்ற கூட்டம் அப்பக்கமாக ஓடுகின்றது. 'பாவம் கமலம் செத்துவிட்டாள்' யாரோ ஒரு இரக்க சிந்தனையாளரின் குரல.

அங்கே தன் செல்வத்தை அணைத்தபடி கமலத்தின உடல் கிடக்கிறது.

உலகுதான் அவளை ஆதரிக்கவில்லை. இயற்கையுமா அவளை விட்டுவிடும்? அவளை ஆரத் தழுவித் தன்னுள் அடக்கி, அவளைச் சூழ்ந்த பழியைப் போக்கிப் புனிதமாக்கி சாந்தியடைந்துவிட்டது அது.

# ஆச்சி பயணம் போகிறாள்

—(9)—————

ஆச்சி புரண்டு படுத்தாள்.

செல்வி சற்று விலகி அமர்ந்துகொண்டாள்.

இருந்தாற்போல மெயில் ஒரு சிறு குலுக்கலுடன் நின்றது. ஏதாவது ஸ்ரேசனுக்கும் என முதலில் எண்ணிய சிவராசா, நேரம் செல்லவே சந்தேகத்துடன் யன்னலால் தலையை நீட்டி வெளியே பார்த்தான். மெயிலின் குலுக்கலோடு நித்திரை கொண்ட ஆச்சியால் மெயில் நின்றதும் நித்திரை கொள்ள முடியவில்லை.

'ஏன்ராப்பா கோச்சி நிக்குது?' எனக் கேட்டாள்.

'தெரியவில்லை ஆச்சி!'

'சிக்னல் விழவில்லையோ' என்றுன் செல்வி.

'அது என்ன சிக்குனல்...?'

'கை காட்டி யணை... ஒரு ஸ்ரேசனுக்குள் றெயில் பிரவேசிப்பதற்கு முன், சிக்னல் ஒன்று இருக்கிறது... அது விழுந்தால் தான் இது போகும்...

'எதுக்குள்ளை விழுகிறது'

'விழுகிறதில்லை ஆச்சி, இப்படிக் கீழை இறங்கும்...' என வலது கையால் இறக்கிக் காட்டினுன்.

'உதேன்?'

'பாதை கிளியர் வரலாம் என்பதற்கு, ஆச்சி'

'இது என்ன விசர் வேலை... ஒரு றெயில் பாதையிலை ஒரு றெயில்தானே ஓடலாம்... ஒன்று போகேக்கை ஒன்று குறுக்கே வந்தால் எப்படி வலத்துறது...?' ஆச்சி கூ திக்கொண்டு வந்தாள்.

வெளியே கலகலப்பு எழுந்தது.

சிவராசா வெளியே பார்த்தான்.

'பெரிய பரிதாபம்... சிதைந்துபோய்க் கிடக்குது... தலை வேறை, கால் வேறையா... மூதேசிகளுக்கு வாழ்க்கை வெறுத்தால் சாகிற இடம் இதுவே...?

'என்னவாம் சிவராசா?'

'ஆரோ றெயிலுக்கே விழுந்து தற்கொலை செய்திட்டினமாம்!'

ஆச்சி திடுக்கிட்டுப்போனுள் 'முருகா' என்று முனகிக்கொண்டாள். எத்தனை விதமாகத்தான் மனிசன் தன்னை அழிச்சுக்கொள்கிறுன். ஒருகண ஆவேசம் உயிரையும் வெறுக்க வைக்கிறது... எதுக்காகச் செத்தானே...'



[இப்படிக் கீழே இறங்கும்]

செல்வி மிரண்டுபோய் இருந்தாள்.

'உப்பிடித்தான் நம்மடை அப்பையா, புள்ளையளுக்கும் நஞ்சு கொடுத்திட்டுத் தானும் குடிச்சுச் செத்தது. அவள் சரியா நடந்திருந்தால் எல்லாம் வந்திருக்காது... நாலு பிள்ளையளோடை அவனை விட்டுவிட்டு ஓடினுல் அவன் மானத்திற்குப் பயந்து நஞ்சு குடிச்சான். இப்ப உலகிலை இதுதானே எங்கையும் நடக்குது. எங்கடை பேப்பர்களைப் பாத்தால் தெரியுதே? ஒரே கொலை, கொள்ளை, கற்பழிப்பு தானே? உலகம் மெத்தக் கெட்டுப் போச்சு...'

'உலகம் இருந்தது போலத்தான் இருக்குது ஆச்சி, உந்தப் பேப்பர்காரர்தான் உதுகளைப் போட்டு, ஏதோ உலகமெல்லாம் கொலை, கொள்ளை கூடிவிட்டது என்று மயக்கத்தைத் தருகினம்.'

'ஓ... எங்கடை சிவசம்புவின்ரை பேத்தி தூக்குப் போட்டுச் செத்ததையும் பேப்பரிலே போட்டிருந்தாங்கள்...'

செல்விக்குத் தூக்கக் கலக்கம். மெயில் ஒருவழியாகப் புறப்பட்டது.

'நீ படு பிள்ளை...' என கட்டளையிட்டாள் ஆச்சி.

செல்வி மெதுவாகப் படுத்தாள்.

இப்ப என்ன நேரம் ராசா?

ஒரு மணியாகுது

எப்ப பொல்காவலைக்குப் போகும்?

'மூன்றரைக்கு...'

ஆச்சி வெளியே கண்களை மேயவிட்டாள்.

'ஒரே காடுதான்... இங்கிருந்துதானே எங்களுக்கு விறகு வாறது...?'

'இல்லை ஆச்சி.'

'உதெல்லாம் என்ன மரங்கள்?'

சிவராசாவிற்கு ஒரே எரிச்சலாக இருந்தது. பிறகு பரிதாபமாகவும் இருந்தது. பாவம் ஆச்சி.

'பாலை... வீரை...'

'பாலையோ?... முனியளுக்கு பாலை மரம் என்றால் நல்லாப் பிடிக்கும்'

முனியோ, அதென்னெணை?

'அதுதான்ரா பேய்களிலை ஒரு சாதி...'

'பேய்களிலும் சாதிவேறுபாடாணை. நமக்குள்ளைதான் அப்படியென்றால்...'



'ஏன் இருக்காதே... பேய்களும் நம்மைப் போல மனிசர் தானே? அவலமாச் சாகிறவர்கள் காலம் வரும் வரை பேயாகத் திரிவினம். தட்டாதெருப் புளியமரத்திலை இப்பவும் முனி இருக்கு... முந்திச் சுப்பரப்பா என்று ஒருவரை வெட்டிக் கொன்றவங்களாம்...அவர்தான் முனியா அங்கை நிக்கிறாராம்...'

'உனக்கு இது எப்படித் தெரியுமணை' எனக் கேலியாகக் கேட்டான் சிவராசா.

'அப்பு அவை சொன்னவை?'

'அப்புவுக்கு ஆரணை சொன்னவை?'

'உனக்குக் கேலியாக இருக்கு நீ நம்பமாட்டாய்... நரியன் குண்டடியிலை ஒரு ஆலமரம் இருக்கெல்லோ...' ஆச்சி கூறத் தொடங்கிவிட்டாள்.

நல்லவேளை செல்வி நித்திரை.

—[ 10 ]——————————

'நரியன்குண்டு முன்பு, இப்போதிருப்பது போல சனப்புழக்கமான இடமல்ல. ஒரே பற்றைகளும், பனைகளும் நிறைந்த பகுதி. அந்தக் குண்டை அடுத்து வளர்ந்திருந்த ஆலமரத்தில் ஒரு முனி இருந்தது. நல்ல முனி. எல்லாருக்கும் கஸ்டம் தராது.

அம்மன் கோவிலடியில் சின்னத்தம்பி என்றொரு மந்திரக்காரர் இருந்தார். அவர் வீட்டில் வேலை செய்கின்ற வேலைக்காரச் சிறுமி நீராவியடியில் பால் வாங்கிக்கொண்டு நரியன் குண்டடியால் தான் வருவது வழக்கம். செம்பிலை பாலை வார்த்துத் தலையிலை வைத்துக்கொண்டு வருவாள்.

'முனி இதனைப் பலநாட்களாகக் கவனித்துவந்தது. ஒருநாள் அச்சிறுமி வரும்போது, கிழவரைப் போல முனி வந்து, கொஞ்சப் பால் தரும்படி கேட்டது. சிறுமி கொடுக்க மறுத்துவிட்டாள்.


முனிக்குக் கோபம். அவளுக்குத் தெரியாமலே செம்பில் இருந்த பாலை உறுஞ்சிக் குடித்துவிட்டது. சிறுமிக்கு ஒவ்வொரு நாளும் வீட்டில் அடிதான். 'நீதான் குடிச்சிட்டுவந்து பொய் சொல்கிறாய்' என்று சிறுமியைச் சின்னத்தம்பியின் மனைவி கொடுமைப்படுத்திவந்தாள்.

சின்னத்தம்பிக்குச் சிறுமி மீது நல்ல நம்பிக்கை. இதில் ஏதோ சூது இருக்கிறது என்று எண்ணிக்கொண்டார். மறுநாள் சிறுமி பால் வாங்கிக்கொண்டு வரும்போது, பின்னால் ஒளித்து ஒளித்து வந்தார். கூடவே ஒரு மந்திர ஆணியையும், சுத்தியலையும் கொண்டுவந்தார். ஆலமரத்தடி வந்தது. முனி மெதுவாகப் பால் குடிப்பதற்காக இறங்கி வந்தது, அவ்வளவுதான்- சின்னத்தம்பி வேகமாக வந்து முனியின் உச்சந் தலையில் ஆணியை



அடித்துவிட்டார். அது ஒரு பெண்ணாக மாறிவிட்டது.

**பொம்மை**



கலையுலகின்
பெருமைப்
பெட்டகம்

இலங்கை முழுவதும்
சப் ஏஜண்டுகள் தேவை...

சோல் ஏஜண்ட்
**த. தம்பித்துரை அன் சன்ஸ்**
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**அம்புலிமாமா**

**சிறுவர் சிறுமியர்**
**விரும்பிப் படிக்கும்**
**மாதப் பத்திரிகை**

இலங்கை முழுவதும்
சப் ஏஜண்டுகள் தேவை.

சோல் ஏஜண்ட்
**த. தம்பித்துரை அன் சன்ஸ்**
226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

ஒரே இடத்தில்
தங்க நகைகளுக்கும்
தரமான ஆடை அணிகளுக்கும்

**சிங்காரம் ஜவுளி மாளிகை**
**டைமா நகை மாளிகை**


47, செட்டியார் தெரு, கொழும்பு-11. டெலிபோன்: 20875

'தன்னை விட்டுவிடும்படி' எவ்வளவு கெஞ்சியும் அவர் விடவில்லை.

'வீட்டிற்கு அழைத்துவந்து வேலைக்காரியாக வைத்துக் கொண்டார். முனி நல்லா வேலை செய்தது. சொல்லமுன்னம் எல்லா வேலைகளையும் செய்தது. அதனால் சின்னத் தம்பியின் மனைவிக்கு முனியம்மாமேல் நல்ல அன்பு.

ஒரு நாள் முனியம்மா, தனக்குப் பேன் பார்த்துவிடும்படி சின்னத்தம்பியின் மனைவியைக் கேட்டது. அவளும் பார்த்தாள்.

'இதென்ன உன்ரை தலையிலை ஒரு ஆணி கிடக்கு...'



'முந்திக் குத்தினது அம்மா. ஒருக்கா எடுத்துவிடுங்கோ...

உண்மையை அறியாத அவள் ஆணியைப் பிடுங்கிவிட்டாள். அவ்வளவுதான் முனி ஓடிவிட்டது.

'சின்னத்தம்பி வந்தார். உண்மையை அறிந்தார். திரும்பவும் ஆலமரத்தடிக்குப் போனார். முனி அவரின் கால்களில் விழுந்து கும்பிட்டு, 'இனிமேல் ஒரு சேட்டையும் விடுவதில்லை என்று வேண்டியது. பாவம், என்று அவரும் வந்துவிட்டார்.' என்றாள் ஆச்சி.

'இதையெல்லாம் நீ நம்புகிறாயாணை...' எனச் சிவராசா ஆச்சியைக் கேட்டான்.

'நம்பாமல்... உனக்கென்ன தெரியும். உன்ரை சீனியப்புவிற்கு ஒருமுறை நடந்தது தெரியுமே? சீனியப்புவின்ரை தோட்டம் வலு பெரியது. சுப்பிரமணியமும் சேர்ந்துதான் அதிகாலையிலை தண்ணீர் இறைக்கிறது வழக்கம். நேரத்தோடை தோட்டத்திற்குப் போய் இறைச்சுப் போட்டு வருவினம். சீனியப்புவிற்குக் குடிக்கிற பழக்கமுண்டு. அதனால் சுப்பிரமணியந்தான் காலையில் வந்து எழுப்புவார். ஒருநாள் மாலை கனக்க மடத்தடிச் சுடலையடியில் வரும்போது சீனியப்பு சுப்பிரமணியத்திடம் சொன்னார்- 'நாளைக்குக் கெதியா வந்து எழுப்பு. தண்ணி இறைக்க வேணும்.' சுப்பிரமணியத்திற்குச் சொன்னதை ஒரு பேய் கேட்டுக்கொண்டிருந்தது. அடுத்த நாள் காலமை, சுப்பிரமணியம் போலை வந்த பேய் சீனியப்புவை எழுப்பிக் கூட்டிக்கொண்டு தோட்டத்திற்குப் போனது. சீனியப்பு வாய்க்கால் வெட்ட, பேய் நீர் இறைக்கத் தொடங்கியது. நீர் வெள்ளமாக வருகுது! சீனியப்புவால் வாய்க்கால் வெட்ட முடியவில்லை. 'டேய் சுப்பு! மெதுவா இறையடா' என்று சீனியப்பு சொல்ல, பேய் 'உம்... உம்...' என்று உறுமியபடி இறைச்சுத் தள்ளுது. சீனியப்புவிற்குச் சந்தேகம். வானத்தைப் பார்த்தார். 'பகீர்' என்றது. நேரம் நடுச்சாமம் என்று அப்போதுதான் தெரிந்தது. என்ன செய்தார் தெரியுமா? வேட்டியை உரிஞ்சு மண்வெட்டியைப் போர்த்துவிட்டு வீட்டிற்கு ஓடிவந்துவிட்டார். பேய் கிணற்று நீர் முழுவதையும் இறைச்சுப்போட்டு வந்து பார்த்தது. சீனியப்பு இல்லை. கோபத்திலை மண்வெட்டியைத் தூள் தூளாக்கிப்போட்டுச் சீனியப்புவின் வீட்டுப் படலையடிக்குப் போச்சுது. அங்கை உண்மையான சுப்பிரமணியம் சீனியப்புவை எழுப்பிக்கொண்டிருந்தார். சீனியப்பு வெளியிலை வந்தால்தானே' என்றாள் ஆச்சி.



சிவராசா நல்ல நித்திரை.

—[ 11 ]—

குருநாகல் வந்தபோது சிவராசா விழித்துக்கொண்டான். செல்வியும் எழுந்து அமர்ந்துகொண்டாள்.

'இதென்ன ஸ்ரேசன்?' என்று கேட்டாள் செல்வி.

'குருநாகல்...'

'நீ முன்னம் குருநாகலிலை இறங்கித்தானே கண்டிக்குப் போறனி?' என்று வினவினாள் ஆச்சி.

ஒருவர்: என்ன சார், உங்க தொழிற்சாலை தீப்பிடிச்சு எரிஞ்சு போயிட்டுதாம்! நீங்க என்ன சார் தயாரிக்கிறீங்க?

மற்றவர்: நெருப்பணைக்கும் சாதனங்கள்.

'ஓம், ஆச்சி! பொல்காவலையில் இறங்கி, காத்திருந்து றெயில் எடுத்துப் போவதிலும், குருநாகலில் இறங்கி பஸ் எடுத்துப் போறது சுலபம்.. கெதியாய் கண்டிக்குப் போயிடும்... இங்கத்தை பஸ்கள் மிகத் திறமானவை...'

'அப்ப நாங்களும் அப்படிப் போகலமோ...?'

'சாமான் இருக்கு... மேலும் றெயிலிலை போனால் நேரே யூனிவேசிற்றிக்குள்ளை கொண்டு போய்விடும்...'

ஆச்சி வெளியே கழுத்தை நீட்டிப் பார்த்துவிட்டு, வியப்போடு உள்ளே தலையை இழுத்தாள்.

'இந்த வெள்ளனவா ஆரோ இளநீர் குடிக்கினம்... குளிராக்க வல்லோ போகுது...'

'அது அவையளுக்குப் பழக்கமணை...'

றெயில் புறப்பட்டது. செல்வி நேரத்தைப் பார்த்தாள்.

இன்றைக்கு இது 'லேற்'.

'கேற்றோ... இப்பதான் நினைவு வருகுது... வீட்டுக் கேற்றைச் சரியாகப் பூட்டினமோ? கள்ளர் பயம் வேறை இப்ப அதிகம்... போன கிழமை பொன்னுத்துரையின்ரை கடைக்குள்ளை புகுந்து எல்லாத்தையும் அள்ளிக்கொண்டு போட்டான்கள்... வேலியும் திறந்தபடி...' ஆச்சிக்கு வீட்டுக் கவலை தொடங்கிவிட்டது.

வைகறைப் பொழுதின் குளிர்காற்று செல்வியின் உடலில் பட்டு மெதுவான நடுக்கத்தை ஏற்படுத்தியது. சிவராசாவோடு நெருக்கமாக அமர்ந்துகொண்டாள்.

'செல்வி' என மெதுவாக அழைத்தான் சிவராசா.

'உம்...'

'குளிருதா?'

'இல்லை' என்பதுபோலத் தலையை அசைத்தாள் செல்வி.

'மாத்தையா' என்று கேட்டபடி வெயிற்றர் வந்தான். அவனைக் கண்டதும் புளியங்கொட்டையின் மணம் ஆச்சியின் மூக்கில் ஏறியது.

'அறுவான்கள் கோப்பியை உப்பிடி விக்கிறான்களே...' என முணுமுணுத்துக்கொண்டாள் ஆச்சி. கோப்பி என்றது வெயிற்றருக்குக் கேட்டது.

'மூன்று கோப்பி ஆச்சி? என வினவினான்.

'எப்பா' என்றாள் செல்வி.

'அப்பாவோ... எங்கை பிள்ளை?'

'எப்பா, மாமி! எப்பா என்றால் வேண்டாமென்று அர்த்தம்.

பொல்காவலையில் மெயில் வந்து நின்றது.

'இறங்கு, ஆச்சி! செல்வி, எழும்பு'

ஆச்சி எழும்பாமல் இருந்தாள்.

'ஒரே இருப்பா இருந்தது... கால் விறைச்சுப் போச்சுது... கொஞ்சம் பொறு... என்ன குளிர்...'

'பனிக்குளிர்...' என்றான் சிவராசா.

மூவரும் இறங்கினர்.

'துரை, தூக்கவே...?' என்றபடி போர்ட்டர் ஒருவன் வந்தான்.

'தூக்கவேண்டாம். நாங்க நடப்பம்' என்றாள் ஆச்சி.

தங்கும் அறை ஒன்றுக்குப் போனார்கள்.


'இப்படி இரு ஆச்சி'

அறையை நோட்டம் விட்டாள் ஆச்சி. பழைய அறை. எட்டு ஒன்பது கதிரைகள் கிடந்தன. அதில் மூன்று நான்கு இருக்க லாயக்கற்றன. பின்னல் அறுந்து கிடந்தன. கதிரைகளின் நிறம் சொல்லுந் தரமன்று.




'இரு ஆச்சி' என்றான் சிவராசா திரும்பவும்.

## விசித்திரக் கற்பனை




'கோண்டாவில் கதிரையள் பிழையில்லை...' என்றாள் ஆச்சி.

'இதிலை கனநேரம் இருக்க வேணுமே?'

'ஆறு மணிக்குத்தான் கண்டி றெயின்...' என்றாள் செல்வி.

'அதுமட்டும் என்ன செய்யிறது.'

'காத்திருக்கிறதுதான்.'

வெளியே மழை மெதுவாகத் தூறத் தொடங்கியது.

'மழையே...? வெளியிலை விறகு எல்லாம் கிடந்தது...காஞ்சவை எடுத்து வைக்கினமோ...'

'இங்கை மட்டுந்தான் மழை ஆச்சி! அங்கை பெய்யாது... இனி உங்காலை ஒரே மழைதான்...'

'முகம் கழுவப்போறியளே, மாமி?'

'எப்பா...' என்றாள் ஆச்சி.

(தொடரும்)

### சிரித்திரன் சந்தா விண்ணப்பப் பத்திரம்

பெயர்: ____________________

விலாசம்: ____________________

____________________

1 வருட சந்தாப் பணமாக ரூபா 6/-

6 மாதச் சந்தாப் பணமாக ரூபா 3/-

இத்துடன் அனுப்புகிறேன்: ஏற்றுக்கொண்டு ______ மாதம் தொடக்கம் சிரித்திரனை அனுப்பிவைக்கவும்.

______ ______

திகதி கையொப்பம்

(பணத்தைப் போஸ்டல் ஓடராக, மனேஜர் சிரித்திரன் 101/4 சென். பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.)

## பகிடி தெரியாத அந்தோனியார்!

மீனவர் குலத்துதித்த ஆசீர்வாதத்திற்கு, குலத் தொழிலால் போதிய வருமானம் பெறமுடியவில்லை. வேறு தொழிலும் பார்க்க முடியாத நிலையில், வழமைபோல் ஒருநாள் மீன் பிடிக்கச் செல்கையில், தனது குலத் தெய்வமான அந்தோனியாரை நினைத்து, 'அந்தோனியாரே! இன்று எனது தூண்டிலில் பெருமளவு மீன் அகப்படக் இருபை புரிவீரேல், தூண்டிலில் முதல் அகப்படும் மீனை விற்று வரும் பணத்தில் உங்களுக்கு மெழுகுதிரி கொழுத்துவேன்' என வேண்டிக்கொண்டு வள்ளத்தை நகர்த்தினான். நேரமும் நகர்ந்தது.

தூண்டிலிட்ட சிறிது நேரத்தில் பெரிய விளைமீன் ஒன்று அகப்பட்டது. ஆசீர்வாதத்தின் மகிழ்ச்சிக்கோர் எல்லையில்லை. உற்சாகத்துடன் தொடர்ந்தும் தூண்டிலை வீசினான். பாவம்! ஒரு சிறு மீனாவது அகப்பட்டாற் தானே!

வள்ளத்தைத் திருப்பி, வீடு நோக்கிச் செலுத்தினான். வழியில் அந்தோனியாரையும் நினைக்கத் தவறவில்லை. ஆனால் வழிபாடு முறைதான் வேறுவிதமாக இருந்தது.

'அந்தோனியாரே! கிடைத்ததோ ஒரேயொரு மீன். இதன் பெறுமதியில் உங்களுக்கு மெழுகுதிரி கொழுத்தினால், வருந்தியதற்குக் கூடப் பலன் காணாதவனா

வேன். ஆதலால் இன்றுமட்டும் மன்னித்துக் கொள்ளவேண்டும். இனி தினமும் முதல் பிடிக்கும் மீனின் பெறுமதிகொண்டு எனது வாக்கைக் காப்பாற்றுவேன்!' என வேண்டினுன், ஆசீர்வாதம். தெய்வத்தின் சோதனையோ, என்னவோ? பறியிலிருந்த மீன் துள்ளிக் குதித்துக் கடலில் வீழ்ந் தோடியது.

ஆசீர்வாதத்திற்கு ஒரே அதிர்ச்சி.

'அந்தோனியாரே! உங்களுக்குப் பகிடி, வெற்றி தெரியாதா? நான் பகிடிக்குக் கூறியதை வெற்றியாக எடுத்துக் கொண்டு...' -மெல்ல முணு முணுத்தான்.

—வ. சவிரிமுத்து,
ஆனைக்கோட்டை

## பரிசு!

இம்முறை பரிசு பெறும் பள்ளிப் பகிடி:

முருங்கன் மகேஸ்வரன்


எழுதிய

'மன்னிக்க வேண்டுகிறேன்'

ஒருவர்: மனேஜர் ஏன் இப்படி 'கோலிங் பெல்' மாதிரி அலறுகிருர்?

மற்றவர்: 'கோலிங் பெல்'லிலே கை வைச்சாராம் 'சொக்' அடிச்சிட்டுதாம்.

———கல்முனை - இஜபத்துல்லா.




நடுநிசி விறுவிறுப்பாகப்போய் முடிந்துவிட்டது. ஐயோ பாவம்! விமலா.

—கிருஷ்ணு, 19/4, கம்பனி வீதி, நாவலப்பிட்டி.

ஃ ஃ ஃ

எத்தனையோ மைல்களுக்கு அப்பால் உள்ள இதயங்களுடன் தொடர்புகொள்ள வழி செய்கிறது, பேனு நண்பர் பகுதி. தொடரட்டும் அப்பகுதி.

—சூ. எமிலியானுஸ், நானுட்டான்.

ஃ ஃ ஃ

ஆச்சி பயணம் நயமான நகைச்சுவையுடன் போய்க்கொண்டிருக்கிறது. வாழ்க ஆச்சி.

—இ. தர்மபாலன், 'விமலபவனம்', நெடுங்கேணி.

ஃ ஃ ஃ

மாணவர்களின் அறிவை வளர்க்கக்கூடிய விஷயங்களும் சிரித்திரனில் இடம் பெற்றுல் விசேஷமாக இருக்கும்.

—இரத்தினமாளிகை,88 மெயின் வீதி, ஹற்றன்.

ஃ ஃ ஃ

நான் தூங்காமல் காவற்பணி புரிவதற்கு உங்கள் புன்னகை ஏடாம் சிரித்திரனையே படிக்கிறேன்.

—அழகிரிசாமி சிவசாமி, மில்க்வைற் தொழிற்சாலை, யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

எண்ணக்குவியல் என்ற தலைப்பில் ஒரு பகுதியை ஆரம்பித்து வைத்தால் நாமெல்லாம் பங்கு பெறலாம்.

—எம். ஏ. காதர், கொழும்பு-15.

ஃ ஃ ஃ

அன்பையும் அறிவையும் பரிமாறிக்கொள்ள பேனு நண்பர் பகுதி பெரும் தொண்டாற்றுகிறது.

—க. துரைராசா, கோப்பாய் தெற்கு.

ஃ ஃ ஃ

மாசி இதழில் 'ஆரம்பம் நீ...முடிவு நான்', 'பழி' முதலிய கதைகளையும், 'அகல் விளக்கு', கல்நெஞ்சன்' போன்ற தத்துவக் கதைகளையும் படைத்த ஆசிரியர்களுக்கு என் வாழ்த்துக்கள்.

—சோ. ரா. வரன், டி/3 நியூடவுண், அம்பாறை.




ஸ்ரான்லி ஹென்றிக் (22), யட்டதேரியா, றப்பர் எஸ்டேட் உந்துகொடை.
[பத்திரிகை படித்தல், பேனு நண்பர் தொடர்பு]

அ சே. மகேந்திரன் (20), 66/1, மேபில் ரோட், கொட்டாஞ் சேனை, கொழும்பு-13.
[வானொலி கேட்டல், கதை வாசித்தல், படம் பார்த்தல், சமூகசேவை]

அ. அரசரெத்தினம் (24), வட்டார இல: 6, சேனையூர், மூதூர்.
[கவிதை எழுதல், படித்தல், சித்திரம் வரைதல், விளையாடு தல்]

மா. சுப்பிரமணியம் (20), இல: 17 இராமநாதபுரம், கிளி நொச்சி.
[வானொலிகேட்டல், பத்திரிகை வாசித்தல்]

எ. யி. ஜெகநாதன் (22) இல: 32 சென் லூசியஸ் வீதி, கொட்டாஞ்சேனை.
[வர்த்தகம், முத்திரை சேகரித் தல்]

மா. நிர்மலன் (20), 41 புதிய நகர், கதிர்காமம்.
[பேனு நண்பர் தொடர்பு, வானொலி கேட்டல், கிரிகட்]

இரா. இராமச்சந்திரன் (24), இல: 3/10 ரவுப் கட்டிடம், கொழும்பு-10.

**பேனு நண்பர் விண்ணப்பப் பத்திரம்**

பெயர்: ———————————————————

முகவரி: ———————————————————

———————————

வயது: ———

பொழுதுபோக்குகள்: ——————————————

———————————————————————

தயவு செய்து பேனு நண்பர்கள் பகுதியில் எனது பெயரை யும் சேர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அதற்காக இத்துடன் சிரித்திரன் 1 வருட சந்தாப் பணம் அனுப்பியுள்ளேன்.

——————  ——————

திகதி  கையொப்பம்

வாசகர்களே! 1 வருட சந்தா செலுத்திப் பேனு நண்பராகுங்கள்.

[புகைப்படம், கடிதத் தொடர்பு கிரிக்கட், கால்பந்தாட்டம் ஆடு தல்]

ஜெயந்தி இராமலிங்கம் (16), 20/6 வன்னியாஸ் ரோட், மட் டக்களப்பு.
[முத்திரை சேகரித்தல், பாடுதல் படித்தல், பட்மின்ரன் விளையா டுதல்]

எஸ். டி. அமிர்தலிங்கம் (23), சொறணை குரூப், ஹொறணை.
[வானொலி கேட்டல், கடிதத் தொடர்பு. சினிமா பார்த்தல், பாட்டுப் பாடுதல்]

ஏ. எல். ஏ. லத்தீப் (18), நூருணியாஸ்டேட், இக்பால் லேன், அக்கரைப்பற்று-1
[நகைச்சுவை எழுதல், சிறுகதை கவிதை, கட்டுரை எழுதல]

ஆ. பு. குமார் (23), சின்ன மிளகு சேனை டிவிசன், ரெட்ட பூட்டு, நாகசேனை.
[புத்தகம் வாசித்தல், கதை எழு தல், பேனு நண்பர் தொடர்பு]

சின். அன்பழகன் (27), அனு ராதபுரம் வழி, கித்துலூன்று கன்னியா திருமலை.
[கதை, கட்டுரை வரைதல், அறிவு நூல்கள் வாசிப்பது, தூய தமிழ் வளர்த்தல், விவாதிப்பது]

இ. நவரத்தினம் [20] மே/பா இரத்தினம், கட்டைப்பிராய், கோப்பாய் தெற்கு.
[பத்திரிகை படித்தல், றேடியோ கேட்டல், முத்திரை சேகரித் தல்]

என். வி. பாலசுப்பிரமணியம் (19). மடத்து வெளி, புங்குடு தீவு-8
[புத்தகம் படித்தல், படம் பார்த்தல், பேனு நண்பர் தொடர்பு]

எம். ஹென்றி ஜெயநாதன், கே. எல். அந்தோனிப்பிள்ளை அன் சன்ஸ், மெயின் வீதி, பண் டத்தரிப்பு.
[கதை வாசித்தல், வாகனம் பயி லுதல், இசை பயிலுதல், வானொலி கேட்டல்]

பஸ்ஸில் எக்கச்சக்கமான கூட்டம். அந்த அழகிய இளம் பெண் நின்றுகொண்டிருந்த இடத்திற்குப் பக்கத்திலுள்ள ஆசனத்திலிருந்த, ஒரு வயதுபோன மனிதர் தன் ஆசனத்தை விட்டெழுந்தார்.

'பரவாயில்லை! நான் நின்னுகிட்டே வர்றேன். நீங்க இருங்க!' என்று அவர் கையைப் பிடித்து அமர்த்தினாள் அவள். பஸ் சிறிது தூரம் சென்றது. பெரியவர் மீண்டும் எழுந்தார். 'நீங்க உட்காருங்க சார்!' என்று மீண்டும் அவர் கையைப் பிடித்து அமர்த்தினாள் அப்பெண்.

'அம்மா! நான் இறங்கவேண்டிய இடம் ஏற்கனவே தாண்டிட்டுது. அடுத்த ஸ்டாப்பிலேயாவது இறங்கவிடுறீங்களா?' என்றவாறே அவர் எழுந்து நடந்தார்.

ஃ ஃ ஃ

நோயாளி: இந்த நோயாலே நான் படுற அவஸ்தை.. உயிரையே போக்கிக்கணும் போலத் தோணுது. என்ன செய்யலாம் டாக்டர்...?

டாக்டர்: அதைப்பற்றி நீங்க கவலைப்படாதீங்க. நான் பாத்துக்கறேன்.

ஃ ஃ ஃ

ஒருவர்: உங்களாலே எதையுமே செய்யமுடியாதாமே. எல்லோரும் சொல்லுறாங்க.

மற்றவர்: இடக்கிறானுகள் விடுங்கோ.... இப்போ என்ன செய்யணும்னு சொல்லுங்கோ, செய்து காட்டுறேன்.

ஒருவர்: அப்போ... ஒரு பத்து ரூபா கடன் கொடுங்களேன்.

மற்றவர்: ?...?...?...

—கல்முனை இஜபத்துல்லா

பகலிரவாய்ப் பாடுபடும் பாட்டாளி, பாங்குடனே பணம் சேர்க்கும் முதலாளி
இவர்கள் யாவரும் விரும்பிப் புகைப்பது காரம், மணம், குணம் நிறைந்த

கமலா பீடியே!

முப்பது வருடங்களுக்கு மேலாக இந்தியாவிலும், இலங்கையிலும் இணையற்றதெனப் புகழ் பெற்றது

தயாரிப்பாளர்கள்:
கமலா ஸ்டோர்ஸ்
பொன்னம்பலம் பில்டிங்ஸ்,
176, சென்ரல் வீதி, கொழும்பு.

சுவையுள்ள சிற்றுண்டிக்கு, பரிவான கவனிப்புக்கு, பாங்கான உணவு வகைகளுக்கு

ராஜேஸ்வரி பிராமணாள் ஹோட்டல்

இன்று முன்னணியில் நிற்கிறது.

மற்றும்

பழங்கள், இனிப்புகள், சாப்புச் சாமான்கள், பத்திரிகைகள், புத்தகங்கள், மருந்துவகைகள், இவைகள் கிடைக்கும்.

சிரித்திரனும் இங்கே கிடைக்கும்.

ராஜேஸ்வரி ஹோட்டல்

69, நோரிஸ் வீதி, கொழும்பு.

தொலைபேசி: 25939

# — குரு பக்தி —

'வாங்க சேர், உட்காருங்க. டேய் பையா சேருக்கு ஒரு காப்பி வாங்கிக் கொண்டு வா!' என்று கூறிப் பையனைத் தேநீர்க் கடைக்கு அனுப்பினர் 'பிஸ்கட்' கடை முதலாளி.

அந்த ஆசிரியரும் கடை முதலாளியும் நீண்ட காலத் தொடர்புள்ளவர்கள், ஆசிரியர் மிகவும் முரட்டுத்தனமுடையவர். அந்த ஆசிரியரின் அடி தாங்க முடியாமல்தான் பாடசாலையையே விட்டு விலகியவர் அந்த முதலாளி. இந்த முதலாளி 'பிஸ்கட்' மாத்திரமே விற்பவர்.

காப்பி வந்ததும் ஆசிரியர் பருகிக் கொண்டே பழைய முரட்டுத் தன்மையை மறைத்து குழைவாக 'தம்பி இந்த பிஸ்கட் என்ன விலை' என்று கேட்டார். 'இது இரு 2 ரூ. 50 சதம்' என்ருர் மாணவ முதலாளி. மாணவன்தானே, குறைந்த விலையில் தான் சொல்லியிருப்பான் என்று எண்ணி 1 இருத்தல் கட்டு என்ருர்.

'டேய் பையா சேருக்கு 1 இருத்தல் பிஸ்கட்டோட, கூட ஒரு இருத்தல் வைச்சு 2 இருத்தலாக் கட்டு அதுக்குக் காசு வேண்டாம்' என்ருர் முதலாளி. 'தம்பி உனக்கு சிறுவயதிலிருந்தே குருபக்தி அதிகம். அதனுல் என்னுல் வேண்டாமென்று சொல்ல முடியவில்லை' என்று கூறி ஆசிரியர் 2 ரூ. 50 சதம் கொடுத்து பிஸ்கட்டைப் பெற்றுச் சென்ருர்.

ஏன் முதலாளி அந்த சேருக்கு கொடுத்த பிஸ்கட்டின் விலை 1-20 சதந்தானே என்ருன் பையன். ஒ.. அதுவா? அது தாண்டா குருபக்தி காப்பி 10 சதம். நான் கொடுத்த பிஸ்கட் 1 ரூ. 20 சதம் மொத்தம் 2 ரூ. 50 சதம். பையன் சிரித்தான் முதலாளி வண்டியைத் தடவிக் கொண்டார். மற்றைய மாணவர்களிடம் ஆசிரியர் தன்னைப் பற்றிப் புகழ்ந்து பேசியதையும் முதலாளி அறிந்திருக்கத்தான் வேண்டும்.

(யாரோ சொன்னது)
முருங்கன் — மகேஸ்வரன்

ஃ ஃ ஃ

ஒருவர்: ஆண்டொன்று போனுல்...

கொழும்பு நண்பர்: வயதொன்று போகும்.

யாழ் ந. ந: தப்பு, மேயர் பதவி போகும்.

ஃ ஃ ஃ

ஒருவர்: எனக்கு இரகசியம் பேசுபவர்களைக் கண்டால் பிடிக்காது.

மற்றவர்: அதுதான் நல்லது. என்னைப்போலவே நீரும் இருக்கிறீர்.

ஒருவர்: என்ன! உமக்கும் காது மந்தமா?

மற்றவர்: ? ? ?

ஃ ஃ ஃ

முதலாளி: நாம் பதுக்கி வைத்த அரிசி மூட்டையைப் போய்த் தூக்கிவா.

வேலைக்காரன்: வெறும் சாக்குத்தான் இருக்குதுங்க முதலாளி. கள்ள எறும்புகளெல்லாம் அரிசிகளைப் பதுக்கிப் போட்டுதுங்க.

சித்தன்கேணியூர்
அ. பற்குண

ஃ ஃ ஃ

ஒருவர்: கந்தையாவும், கணபதியும் இணைபிரியா நண்பர்கள்னு சொன்னீங்களே. அது உண்மைன்னு நேத்துத்தான் தெரிஞ்சுது.

மற்றவர்: நீ எப்படித் தெரிந்து கொண்டாய்?

முதலாமவர்: அவங்க ரெண்டு பேரும் சண்டைபோட்டுக்கிட்டுக் கட்டிப்புரண்டப்போ, அவங்களைப் பிரிக்க ஆறுபேர் வேண்டியிருந்தது.

ஃ ஃ ஃ

டாக்டர்: என்ன சார்! நீங்க கொடுத்த செக் பாங்கிலே செல்லுபடியாகலையே!

நோயாளி: என் வியாதிக்கு நீங்க கொடுத்த மருந்தும் உடம்புக்குச் செல்லுபடியாகலையே சார்.


டாக்டர்: ? ? ?

## நமது புத்தாண்டுச் செய்தி

தரமான சிறுகதைகளை நமது வாசகர்களுக்கு அளிக்கும் முகமாக 'சிரித்திரன்' பங்குனி மாத இதழிலிருந்து சிறுகதைகளுக்கு ரூபாய் 50/- சன்மானம் கொடுக்க முன்வந்திருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் அறிவித்துக் கொள்கிருேம்.

மேற் கூறிய கதைகள் நமது சிரித்திரன் சிறப்பு கதை பகுதியில் வெளியாகும். மூத்த, இளைய கலைஞர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிருேம்.

— ஆசிரியர் —





என்ன தொப்பி, மழைக்கோட்டு, குடை சகிதமா புறப்பட்டிருக்கீங்க?

பஸ் வாரதுக்கிடையில மாரிகாலம் வந்துட்டா என்ன பண்ணுறது?




இந்த மாமி எப்படி இந்த சின்னச் சட்டைக்குள் புகுந்தா?

அவ பேபி பாப்பாவா இருக்கும்போது புகுந்திருப்பா...



EMPEE INDUSTRIES

Selvam

# EMPEE INDUSTRIES

TEXTILE MANUFACTURERS
&
TEXTILE YARN DYERS.

**PALLANSENA, KOCHCHIKADE.**

*Sole Distributors for Textile Products.*

**SILK PALACE, KOCHCHIKADE.**

# எம்பீ இன்டஸ்றீஸ்

புடவை உற்பத்தியாளர்கள், நூல் சாயம் தீட்டுவோர்

பள்ளன்சேனை, கொச்சிக்கடை.

ஏக விநியோகஸ்தர்கள்:

சிலக் பலஸ், கொச்சிக்கடை.

Registered as a News Paper at G.P.O    Regd No. QB—934

தா தையின்னு குதிக்கிறதை விட்டு தை தையென்று சொன்னேன் கேட்டியாடி? தையல் தெரியாததினுலேதான் பெண் பார்க்க வந்தவங்க உன்னே வேண்டாமின்னுட்டாங்க. 'முயல் மார்க்' நூல்லே எவ்வளவு சீக்கிரமாகத் தையல் பழகலாம் தெரியுமா?



வானவில் வர்ணங்களில் வகைவகையான முயல் மார்க் தையல் நூல்களை எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

தயாரிப்பாளர்கள்:

**சம்பியன் திரெட் மனுபக்சரிங் கம்பெனி,**

கொழும்பு-12




விற்பனையாகிறது
நீர்வை பொன்னையனின்
'உதயம்'
(சிறுகதைத் தொகுதி)
விலை ரூபா 2/
ச. கிருஷ்ணராஜா
3, பெரியகடை, யாழ்ப்பாணம்

101/4 செ‌ன். பெனடிக்ஸ் வீதி, கொட்டாஞ்சேனையிலுள்ள சி. சிவஞானசுந்தரம் அவர்களால் 194 ஏ, பண்டாரநாயகா வீதியிலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் அச்சிட்டு, வெளியிடப்பட்டது.